வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No.: P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 07.09.2024 சனிக்கிழமை | இதழ் : 251 | பக்கங்கள் : 12



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

## ஜனாதிபதி வேட்பாளர்கள் பங்கேற்கும் விவாதம் இன்று

### அரியநேத்திரன், சஜித், நாமல் திலித் பங்கேற்பர்

கொழும்பு, செப். 07

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பொது விவாதம் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது என்று சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான மக்கள் (பவ்ரல்) அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

“மார்ச் 12 மூவ்மென்ற்” அமைப்பின் ஏற்பாட்டில் நடக்கும் இந்த விவாதம் இன்று சனிக்கிழமை

11

## தமிழினப் படுகொலை கல்வி வார சட்டம் அரசமைப்புக்கு உட்பட்டது!

### கனடா மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, செப். 07

இனப்படுகொலை கல்வி வாரச் சட்டம் கனடாவின் அரசமைப்புக்கு உட்பட்டது என்று அந்த நாட்டின் மேன்முறையீட்டு நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது. அத்துடன், அதற்கு எதிராக இலங்கை சார்பான அமைப்பு தாக்கல் செய்த மனுவையும் நிராகரித்துள்ளது.

கனடாவின் கீழமை நீதிமன்றம் ஒன்று இனப்படுகொலை கல்வி வாரச் சட்டம் கனடாவின் அரசமைப்புக்கு உட்பட்டது என்று கூறியிருந்தது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து

11

# நாட்டின் இனவாதம் என்னை ஜனாதிபதியாவதற்கு விடாது!

## பொது வேட்பாளர் அரியநேத்திரன்

திருகோணமலை, செப்ரெம்பர் 07

**“நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் நான் ஜனாதிபதியாக வரப்போவதில்லை. இந்த நாட்டிலுள்ள இனவாதம் என்னை ஜனாதிபதியாக விடாது”, என்று தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.**



திருகோணமலை மூதூர் - பட்டித்திடலில் நேற்று வெள்ளிக்கிழமை நடந்த பரப்புரைகூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இனவாதியும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவருமே இம்முறை ஜனாதிபதியாக வரப்போகின்றார். இதில், எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை. இருப்பினும், அவர்களுக்கு ஒரு செய்தியை சொல்வதற்காகவே ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராகப் போட்டியிடுகிறேன்.

கடந்த காலங்களில் நாம் ஏமாற்றப்பட்டு இருக்கின்றோம். இம்முறையும் ஏமாற்றப்படுவதற்கு தயாராக இல்லை. தமிழ்த் தேசிய

11



## கிளிநொச்சியில் சிறுவர் நீதிமன்றம் நேற்று திறப்பு

கிளிநொச்சி, செப். 07

கிளிநொச்சி நீதிமன்ற வளாகத்தில் சிறுவர் நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

நேற்று திறந்து வைக்கப்பட்ட இந்த நீதிமன்றம் நாட்டின் மூன்றாவது சிறுவர் நீதிமன்றமாகும். முதலாவது நீதிமன்றம் கொழும்பு பத்தரமுல்லையிலும், இரண்டாவது நீதிமன்றம் யாழ்ப்பாணத்திலும் உள்ளன.

சிறுவர் நீதிமன்ற திறப்பு விழாவில் கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதி கிறேசியன் அலெக்ஸ் ராஜா, மாவட்ட நீதிமன்ற நீதிபதி சைலன்

11

## வரிசை யுகத்தை ஏற்படுத்தியவரை ஆதாரத்துடன் வெளிப்படுத்துவோம்

### அதுவும் 21இற்கு முன் என்கிறார் நாமல்



கொழும்பு, செப். 07

“2022ஆம் ஆண்டு அறகலயவுக்குள் இருந்த வரை இடைக்கால ஜனா திபதி ஆக்கினோம். வரிசை யுகத்தை உருவாக்கியது யார், முடிவுக்கு கொண்டு வந்தது யார் என்பதை எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் ஆதாரபூர்வமாக வெளிப்படுத்துவோம்”, என்று சிறீலங்கா பொது ஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

11

## போர்க் குற்றவாளிகளை கண்டறிவேன் நீதிமன்றங்கள் அவர்களை தண்டிக்கும்

### அநுரகுமார திஸநாயக்க தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 07

நான் போர்க் குற்றவாளிகளை கண்டறிவேன். நீதிமன்றங்கள் அவர்களைத் தண்டிக்கும் - இவ்வாறு அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

அநுரகுமார நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவரிடம் செய்தியாளர்கள், “இறுதிப் போரின்போது போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனை வழங்கும் நிலைப்பாட்டில் நீங்கள்

11



## தமிழ் அரசின் மத்திய குழு கூடியதில் விதிமீறல் இல்லை!

### சீ. வீ. கே. சிவஞானம்




யாழ்ப்பாணம், செப். 07

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் தீர்மானத்தை எடுத்த மத்திய செயல்குழு கூட்டம் கட்சி யாப்பின் பிரகாரமே கூடியது என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவரும் வடக்கு மாகாண சபை அவைத் தலைவருமான சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

11

## வட்டுக்கோட்டை விபத்து; காயமடைந்தவர் மரணம்!

யாழ்ப்பாணம், செப். 07

வட்டுக்கோட்டை சந்தியருகே நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த முதியவர் சிகிச்சை பலனின்றி நேற்று வெள்ளிக்கிழமை உயிரிழந்தார்.

அராலி மத்தி - வட்டுக்கோட்டை கணவத்தையை சேர்ந்த நடராசா (வயது 65) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

சித்தன்கேணி செல்லும் வீதியில் வட்டுக் கோட்டை சந்திக்கு அண்மையாக மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த முதியவர் யாழ்.

11

## ரணில் தோற்றால் மீண்டும் இரு ஆண்டுகளில் தேர்தல்!

### ஐக்கிய தேசியக் கட்சி சொல்கிறது

கொழும்பு, செப். 07

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தோல்வியடைந்தால் இரண்டு வருடங்களில் நாடு மீண்டும் ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயாராக நேரிடும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

2024 ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒக்ரோபர் இறுதிக்குள் கடவுச்சீட்டு விநியோகம் வழமைக்கு திரும்பும்!

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, செப். 07

வெளிநாட்டு கடவுச்சீட்டு விநியோகம் ஒக்ரோபர் இறுதிக்குள் வழமைக்கு திரும்பும். வழமையான விநியோகஸ்தர்களிடமிருந்து அவசரமாக வெற்றுக் கடவுச்சீட்டுக்களை கொள்வனவு செய்வதாயின் 89. 4 கோடி ரூபாயை செலவிட நேரிடும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் தலைமை பணிமனையில் கடவுச்சீட்டு விநியோகத்தை மேற்பார்வை செய்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடவுச்சீட்டு விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று அரசியல்வாதிகள் மாத்திரமே கூறுகின்றனர். பிரச்னைகள் ஏதும் கிடையாது. கடந்த 23 ஆண்டுகளாக எவ்விதமான விலைமனுக் கோரலுமில்லாமல் ஒரு வெற்றுக் கடவுச்சீட்டு 5.99 டொலருக்கு குறித்த ஒரு




தரப்பினரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது.

இலத்திரனியல் முறைமையிலான கடவுச்சீட்டு அமுல்படுத்துவதற்கான யோசனை பரிந்துரைக்கப்பட்டுள்ள நிலையில் முன்னிலையான தரப்பினரிடமிருந்து உலகளாவிய ரீதியில் விலைமனுக்கோரல் ஊடாக கடவுச்சீட்டுக்களை பெற்றுக் கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

புதிய கடவுச்சீட்டுக்களை பெற்றுக் கொள்ளும் வரை கடவுச்சீட்டு விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அவசரமாக பழைய முறைமையின் கீழ் கடவுச்சீட்டுக்களை கொள்வனவு செய்வதாயின் மேலதிகமாக 896 மில்லியன் ரூபாவை செலவிட நேரிடும்.

கடவுச்சீட்டு விண்ணப்பிப்பதற்காக திணைக்களத்துக்கு வந்து வரிசையில் காத்திருப்பதை தவிர்ப்பதற்காக நிகழ்நிலை முறைமை ஊடாக திகதி மற்றும் நேரத்தை ஒதுக்கிக் கொள்ளும் முறைமையை அறிமுகப்படுத்தினோம். ஒரு தரப்பினர் 100 சிம் அட்டைகளை பயன்படுத்தி வெவ்வேறு பெயர்களில் பதிவு செய்து அவற்றை பொது மக்களுக்கு 45 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யும் மோசடிகள் இடம்பெற்றன. இதனை தடுப்பதற்காகவே நிகழ்நிலை முறைமை ஊடான வசதியை இரத்து செய்தோம்.

கடவுச்சீட்டுக்கான டோக்கன் விநியோகிக்கும் பணி பொலிஸாருக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளது. குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தில் அவசியமற்ற வகையில் சுற்றி திரிபவர்கள் கைது செய்யப்படுவார்கள். திணைக்களத்தின் வளாகத்தில் மக்கள் கூட்டம் அதிகம் என்பதை காண்பிப்பதற்கு ஒரு தரப்பினர் திட்டமிட்ட வகையில் செயற்படுகிறார்கள் - என்றார். (ஐ)



# மேன்முறையீட்டு நீதிபதிகளாக புதிதாக நால்வர் நியமனம்!

கொழும்பு, செப். 07

மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு புதிதாக நான்கு நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசமைப்பின் 107ஆவது சரத்தின் கீழ் இந்த நியமனங்களை வழங்கியுள்ளார்.

இதற்கமைய, உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதிகளான கே. எம். ஜி. எச். குலதுங்க, டி. தொட்டவத்த, ஆர். ஏ. ரணராஜா மற்றும் முன்னாள் சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் எம். சி. எல். பி. கோபல்லவ ஆகியோர் மேன்முறையீட்டு நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# சட்டவிரோத மணல் அகழ்வை தருமபுரம் பொலிஸ் தடுத்தது!

கிளிநொச்சி, செப். 07

கிளிநொச்சி - தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணை வண்ணாத்தி ஆற்றின் பகுதியில் அள்ளப்பட்ட மணலை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் அறிந்து மணல் அள்ளப்பட்ட பகுதிக்கு சென்ற பொலிஸார் சட்டவிரோதமாக சேகரிக்கப்பட்டிருந்த 15 கியூப்புக்கும் அதிகமான மணலை கைப்பற்றினர்.

கைப்பற்றப்பட்ட மணலை பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் சந்தேக நபர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# கார்களில் முகப்பு விளக்குகளை திருடிய சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, செப். 07

வீடுகளில் நிறுத்தப்பட்டிருந்த நவீன கார்களின் முகப்பு விளக்குகளை திருடி விற்பனை செய்தனர் என்று கூறப்படும் இரண்டு சந்தேக நபர்களை கட்டுநாயக்க பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

நிகவெரட்டிய பிரதேசத்தில் வசிக்கும் 31 வயதுடைய வாகனங்களை பழுது பார்க்கும் நபரொருவரும் கிரில்லவல வெபட பிரதேசத்தில் வசிக்கும் 26 வயது ஒட்டோ சாரதி ஒருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களி டமிருந்து 3 ஆயி ரத்து 100 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் இருவரும் கந்தானை, கொச்சிக்கடை, கட்டுநாயக்க, கணேமுல்லை, பேலியகொடை ஆகிய பிரதேசங்களில் உள்ள வீடுகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சுமார் 12 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நவீன கார்களின் முகப்பு விளக்குகளை திருடியுள்ளனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது. (ஐ)

# ஐ. தே. கவின் பணிமனை தீ வைத்து எரிக்கப்பட்டது

கொழும்பு, செப். 07

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பணிமனை நேற்று மாலை சிலரால் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கம்பஹா மாவட்டத்தின் பியகமவிலுள்ள தேர்தல் பணிமனையு இவ்வாறு எரியூட்டப்பட்டுள்ளது. இதில், கட்சி பணிமனையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த பதாதைகள் எரியுண்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம், ஜே. வி. பியை சேர்ந்தவர்களே தமது கட்சிப் பணிமனைக்கு தீ வைத்தனர் என்று பியகம தொகுதியின் ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் பிரசன்ன சம்பத் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# லொறி மோதிய விபத்தில் தாய் பலி; மகள் படுகாயம்!

கொழும்பு, செப். 07

வேகக் கட்டுப்பாட்டை இழந்த லொறி மோட்டார் சைக்கிளை மோதியதில் தாய் உயிரிழந்தார். மகள் படுகாயமடைந்துள்ளார்.

அநுராதபுரம் - பாதெனிய வீதியில் அம்பன்பொல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த 42 வயதான தாயும் அவரின் 10 வயது மகளும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அங்கு தாய் உயிரிழந்தார். மகள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ஐ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
07.09.2024 சனிக்கிழமை
குரோதி வருடம், ஆவணி 22

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் அரசுக் கட்சி யாருடன்?

திருகோணமலையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் சண்முகம் குகதாசன் தலைமையிலான தமிழ் அரசுக் கட்சியினர் ரணிலுக்கான ஆதரவை வெளிப்படுத்தியிருந்தனர். ரணிலுக்காகக் கூட்டங்களை ஒழுங்கு செய்திருந்தனர். யார் ரணிலுக்கு ஆதரவாகக் கூட்டங்களை ஏற்பாடு செய்தார்களோ - அவர்கள் அனைவரும் தற்போது. குகதாசனின் மறைமுக ஆதரவுடன் தமிழ்ப் பொது வேட்பாளருக்கான ஆதரவை வெளிப்படுத்தி வருகின்றனர் - பிரசாரங்களில் ஈடுபடுகின்றனர். இவ்வாறானதொரு பின்புலத்தில், தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் முடிவை அறிவித்திருக்கின்றது. உண்மையில், தமிழ் அரசுக் கட்சி யாரை ஆதரிக்கின்றது?

தமிழ் அரசுக் கட்சி கொள்கையளவில் இரண்டு அணிகளாக பிளவுற்றிருப்பது உண்மைதானா அல்லது அதுவும் ஓர் அரசியல் நடிப்பா என்னும் சந்தேகமே மேலோங்குகின்றது. ஏனெனில், ஓர் அணியினர் பொது வேட்பாளரை கடுமையாக எதிர்த்து வருகின்றனர். இன்னொருபுறம் பிறிதோர் அணியினர் பொது வேட்பாளரை ஆதரித்துப் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர். ஆதரிப்பவர்களில் பிரதானமானவர் சிவஞானம் சிறீதரன். ஆனால், அவர் இதுவரையில் தமிழ் அரசுக் கட்சியின் தீர்மானத்தை எதிர்த்து பொது மேடைகளில் ஏனைய கட்சியினரோடு ஒன்றுபட்டு நிற்கவில்லை. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் சிறீதரனின் நிலைப்பாடும் ஓர் அரை ஆதரவு நிலைப்பாடுதான்.

மறுபுறத்தில், எதிர்ப்பவர் மிகவும் வெளிப்படையாகத் தனது செயல்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார். சுமந்திரனின் அணுகுமுறைகளை ஒரு தனிநபரின் செயல்பாடு என்று கூறிவிட முடியாது. ஏனெனில், தற்போது தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுவில் தீர்மானம் எடுக்கப்பட்டுவிட்டது. சட்டரீதியில் அது ஏற்புடைய ஒரு தீர்மானம். கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவோ ஒரு சிறந்த அரசியல் நடிகன் - பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஒரு நல்ல கொமடியனாகக் காட்சியளிக்கின்றார். ஆனால், அனைவருமாக ஒட்டுமொத்த தமிழினத்தையும் கொமடி மக்களாக்கிக் கொண்டிருக்கின்றனரா என்னும் கேள்வியே மேலோங்குகின்றது.

தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்ட பின்னர்தான் கட்சியின் உத்தியோகபூர்வ முடிவை அறிவிப்போம் என்று கூறிக் கொண்டிருந்தவர்கள் திடீரென்று, பிரேமதாஸவை ஆதரிப்பதாக அறவித்திருக்கின்றனர். இன்னொருபுறமாக ரணில் விக்கிரமசிங்கவின் ஆசீர்வாதத்தில் அதிக நிதி ஒதுக்கீடுகளை சுமந்திரன் பெற்றிருக்கின்றார். இது எதனைக் காண்பிக்கின்றது?

தமிழ் அரசுக் கட்சி யாருடன் நிற்கின்றது? சஜித்துடனா அல்லது ரணிலுடனா அல்லது இருவருடனுமா? நிலைமைகளைப் பார்த்தால், தமிழ் அரசுக் கட்சியிலுள்ள ஒவ்வொருவரும் ஒவ்வொருவருடன் நிற்கின்றனர். இதில் சிலர் தமிழ் பொது வேட்பாளருடன் நிற்கின்றனர். மொத்தத்தில் தமிழ் அரசுக் கட்சி ஓர் அரசியல் விபசார விடுதியாகவே காட்சியளிக்கின்றது.

# எமது ஒற்றுமையை உலகுக்குக் காட்ட பொது வேட்பாளருக்கு வாக்களிப்போம்

## உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம்

யாழ்ப்பாணம், செப். 07

"நாம் ஒன்றுபட்டுள்ளோம் என்பதை உலகத் துக்குக் காட்டுவதற்காக எமது பொது வேட்பாள ருக்கு வாக்களிப்போம் - என்று உலகத் தமிழ் பண் பாட்டு இயக்கம் தெரிவித் துள்ளது.

தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரித்து அந்த அமைப்பின் செயலாளர் நாயகம் துரை கணேசலிங்கம் விடுத்துள்ள அறிக்கையில்,

எமது தாய் மண்ணில் அடக்கப்பட்டு வாழும் ஓர் இனமாகவும் புலம்பெயர் நாடுகளில் ஓர் ஆரோக்கியமான இனமாகவும் வாழ்ந்து வரும் ஈழத் தமிழர்களாகிய நாம் ஒன்றுப்பட்டே உள்ளோம் என்பதையும் - எமது வாக்குகளுக்கும் ஒரு பலம் உண்டு என்பதை உலகுக்கு காட்டுவதற்காகவும் எமது பொது வேட்பாளருக்கு வாக்களிப்போம்.

ஆகவே, வாக்குப் பதிவு தினத்தன்று தமிழ் மக்கள் தமது வாக்கை தமிழ்ப் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரனுக்கு அளித்து எமது அடையாளத்தை நிரூபிக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சதுர்த்தி பெருவிழா

யாழ்ப்பாணம், செப். 07

நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் ஆவணி சதுர்த்திப் பெருவிழா இன்று சனிக்கிழமை காலை 6.15 மணிக்கு நடைபெறவுள்ளது.

காலை நிகழ்வாக 1008 சங்காபிஷேகம், பஞ்சமுகப் பிள்ளையார் அர்ச்சனை மற்றும் தீபாபரதனைகள் நடைபெறவுள்ளன. மதியம் 12 மணிக்கு மகேஸ்வர பூசை நடைபெறும்.

மாலை நிகழ்வுகள் 5 மணியளவில் மூலஸ்தான பூசையுடன் ஆரம்பமாகி மாலை 6.30 மணியளவில் வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து சுவாமி உள் வீதி, வெளிவீதி உலா வருவார்.

இதேவேளை, சைவசமய அறிவுசார் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழும் பரிசில்களும் வழங்கும் நிகழ்வு மாலை 5.30 மணிக்கு ஆலய உள்வீதி மண்டபத்தில் நடைபெறும். விசேட நிகழ்வு அறநெறிப் பாடசாலை மாணவர்களின் வில்லிசை நிகழ்வும் நடைபெறவுள்ளது. இரவு 8.30 மணிக்கு இராப்போசனம் வழங்கப் படும். (ஐ)

# வெளிநாட்டு பிரஜைகள் விபத்தில் காயம்!

கொழும்பு, செப். 07

தெற்கு அதிவேக வீதியில் 57ஆவது கிலோமீற்றர் மைல் கல் அருகில் இடம்பெற்ற விபத்தில் இரண்டு வெளிநாட்டுப் பிரஜைகள் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை இடம் பெற்றுள்ளது.

லொறி ஒன்று வான் மற்றும் கார் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தின் போது, வானில் பயணித்த இரண்டு வெளிநாட்டுப் பிரஜைகள் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

# சங்கானையில் ஒரே இரவில் 3 வீடுகளில் திருடர் கைவரிசை!

யாழ்ப்பாணம், செப். 07

சங்கானையில் ஒரே இரவில் மூன்று வீடுகள் உடைத்து பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சங்கானை தேவாலய வீதியில் உள்ள மூன்று வீடுகளே கடந்த செவ்வாய்க் கிழமை இரவு 11 மணியளவில் உடைக்கப்பட்டு வீட்டில் இருந்த பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினர் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# வீட்டுக்குள் போதையில் நுழைந்த கான்ஸ்டபிள் பணி இடைநீக்கம்!

கொழும்பு, செப். 07


வீடொன்றுக்குள் மது போதையில் நுழைந்ததாகக் கூறப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

குருநாகல் - மதுரா கொட பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் இவ்வாறு பதவிநீக்கப்பட்டுள்ளார்.

நண்பருடன் சேர்ந்து மது அருந்திவிட்டு குறித்த கான்ஸ்டபிள் வீடு ஒன்றுக்குள் நுழைந்துள்ளார். வீட்டின் உரிமையாளர் அவரை திருடன் என்று நினைத்து பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

அவரை அடையாளம் கண்ட பொலிஸார் பொலிஸ் அத்தியட்சகர் பணிமனைக்கு தகவல் அளிதுள்ளனர். இதைத் தொடர்ந்து மது போதையில் வீட்டுக்குள் நுழைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் பதவி நீக்கப்பட்டுள்ளார். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

எதிர்பாராத பணவரவு உண்டு. பிள்ளைகளின் பெருமைகளை மற்றவர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள். புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். அமோகமான நாள்.

**இடபம்**

குடும்பத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வ்லிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**மிதுனம்**

திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். புது வேலை கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளை சமாளிப்பீர்கள். சில சூட்சுமங்களை உணர்வீர்கள்.

**கடகம்**

சவால்கள், விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் கருத்துக்கு ஆதரவு பெருகும். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். தைரியம் கூடும் நாள்.

**சிம்மம்**

குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் புது முதலீடு செய்வீர்கள். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். அதிரடியான மாற்றம் உண்டாகும் நாள்.

**கன்னி**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில வேலைகளை உங்கள் பார்வையிலேயேமுடிப்பது நல்லது. உத்தியோகத்தில் உங்களைப் பற்றி வதந்திகள் வரும். நிதானம் தேவைப்படும் நாள்.

**துலாம்**

மறைமுக விமர்சனங்களும் எதிர்காலம் பற்றிய பயமும் வந்து நீங்கும். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் வேலைச்சுமையால் சோர்வு அடைவீர்கள்.

**விருச்சிகம்**

குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். வியாபாரத்தில் கடமை உணர்வுடன் செயல்பட தொடங்குவீர்கள். இனிமையான நாள்.

**தனுசு**

தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் வருவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளின் நம்பிக்கையை பெறுவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**மகரம்**

புதிய பாதையில் பயணிக்கத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். அலுவலகத்தில் மரியாதைக் கூடும். மனசாட்சிபடி செயல்பட வேண்டிய நாள்.

**கும்பம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லை என்றெல்லாம் ஆதங்கப்படுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களிடம் போராட வேண்டியிருக்கும்.

**மீனம்**

உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் அதிகாரி உங்கள் புதிய முயற்சியை பாராட்டுவார். நன்மை நடக்கும் நாள்.

# தமிழக மீனவர்களை உடன் விடுவிப்பதுடன் அபராத தொகையை தள்ளுபடி செய்யவும்

## மத்திய அமைச்சருக்கு ஸ்டாலின் கடிதம்

சென்னை, செப். 07

இலங்கை கடற்படையினர் கைது செய்த தமிழக மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் உடனே விடுவிப்பதுடன் மீனவர்களுக்கு விதிக்கப்பட்ட அபராத தொகையை தள்ளுபடி செய்யவும் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி மத்திய அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கு முதல்வர் மு. க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று எழுதிய கடிதத்தில் கூறியவை வருமாறு, தமிழக மீனவர்கள் தங்களது பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளில் மீன்பிடித்துக் கொண்டிருக்கும்போது அடிக்கடி கைது செய்யப்படுவது அவர்களது வாழ்வாதாரத்தை மிகவும் பாதிக்கிறது. தமிழகத்தின் புதுக்கோட்டையைச் சேர்ந்த 4 மீனவர்களை அவர்களது மீன்பிடிப் படகுடன் இலங்கைக் கடற்படையினர் சிறைபிடித்துள்ளனர். இந்தப் பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகள் தமிழக மீனவர்களுக்கு பல தலைமுறைகளாக வாழ்வாதாரமாக திகழும் நிலையில், மீனவர்கள் அடிக்கடி கைது செய்யப்படுவதும் படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் தமிழக மீனவர் சமூகத்தினருக்கு மிகுந்த துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், கடந்த ஜூலை 21ஆம் திகதி கைது செய்யப்பட்ட 12 தமிழக மீனவர்களுக்கு இலங்கை நீதிமன்றம் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் அபராதம் விதித்துள்ளது. இது ஏற்கனவே துயரத்தில் உள்ள மீனவ குடும்பங்களை மிகவும் வேதனைக்குள்ளாக்குவதுடன், அவர்களுக்கு மிகப்பெரிய இழப்பையும் ஏற்படுத்தும். எனவே, இலங்கை வசம் உள்ள மீன்பிடிப் படகுகளை விடுவிக்கவும், மீனவர்களை தாயகம் அழைத்து வரவும், மீனவர்கள் மீது விதிக்கப்பட்ட அபராதத் தொகையை மனிதாபிமான அடிப்படையில் தள்ளுபடி செய்யவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். (எ)

# "விஜய் மீது தி. மு. கவுக்கு ஏன் பயம்?"



சென்னை, செப். 07

மாநாட்டுக்கு இடத்தை கொடுத்தால் மடத்தை பிடித்து விடுவார் என்பதால் நடிகர் விஜயை பார்த்து தி. மு. க. அஞ்சுகிறது என்று தமிழிசை சௌந்தரராஜன் தெரிவித்தார்.

பா. ஜ. க. முன்னாள் மாநில தலைவர் தமிழிசை சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் தமிழக ஆளுநர் ஆர். என். ரவியை சந்தித்தார். இந்தச் சந்திப்புக்கு பிறகு செய்தியாளர்களிடம் அவர் கூறுகையில், மரியாதை நிமித்தமாக ஆளுநரைச் சந்தித்தேன். முன்னாள் ஆளுநர் என்ற அடிப்படையில் சில கருத்துகளை அவரிடம் பரிமாறிக் கொண்டேன். முதல்வர் ஸ்டாலின் வெளிநாடு செல்வதற்கு முன்பு, தமிழகத்தில் புதிதாக எந்த நிறுவனமும் தொடங்கப்படவில்லை. யாருக்கும் வேலைவாய்ப்பு கொடுக்கவில்லை எனவும் அவர் கூறினார்.



# விநாயகர் சதுர்த்தி இன்று; சிலைகள் விற்பனை தீவிரம்

கோவை, செப். 07

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, கோவை பூ விற்பனை சந்தையில் பூக்கள் விற்பனை மற்றும் வீடுகளில் வைத்து வழிபடக்கூடிய விநாயகர் சிலைகள் விற்பனை தீவிரமாக நடைபெற்றது.

விநாயகர் (ஆவணி) சதுர்த்தி விழா இன்று கொண்டாடப்படுகிறது. விநாயகர் சதுர்த்தி விழாவையொட்டி, கோவை மேட்டுப்பாளையம் வீதி, ஆர். எஸ். புரத்தில் உள்ள பூ சந்தை வளாகத்தில் பூக்கள் விற்பனை அமோகமாக நடைபெற்றது. (எ)

# செந்தில் பாலாஜி வழக்கு தள்ளுபடி

சென்னை, செப். 07

அமுலாக்கத் துறை வழக்கில் இருந்து விடுவிக்கக் கோரி செந்தில் பாலாஜி தொடர்ந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

சட்டவிரோத பணப்பரிமாற்ற தடைச்சட்டத்தின் கீழ் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியை அமுலாக்கத் துறை அதிகாரிகள் கடந்தாண்டு ஜூன் மாதம் கைது செய்தனர். இந்த வழக்கில் இருந்து தன்னை விடுவிக்கக்கோரிய மனுவை அமர்வு நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இதையடுத்து, உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார். இந்த மனு மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது செந்தில் பாலாஜி தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி, முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் சாட்சி விசாரணை தொடங்கி விட்டதால் இந்த வழக்கில் இருந்து விடுவிக்கக்கோரி தொடரப்பட்டுள்ள இந்த மேல்முறையீட்டு மனுவைத் திரும்பப் பெற்றுக்கொள்வதாக தெரிவித்தார். அதை யேற்ற நீதிபதிகள், வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளனர். (எ)

# இலங்கை கடற்படையினரின் தாக்குதலில் 500 தமிழக மீனவர்கள் உயிரிழந்தனர்

ராமநாதபுரம், செப். 07

இலங்கை கடற்படையினரின் தாக்குதல்களால் 500 தமிழக மீனவர்கள் உயிரிழந்தனர் என்று ம. தி. மு. க. பாராளுமன்ற உறுப்பினர் துரை வைகோ தெரிவித்தார்.

நாடு முழுவதும் போதைப் பொருள் கலாசாரம் அதிகரித்துள்ளது. இதை மத்திய அரசு தடுக்கத் தவறிவிட்டது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

பரமக்குடியில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு, கடந்த 40 ஆண்டுகளாக தமிழக மீனவர்களை தாக்குவதும், அவர்களை கடத்திச் சென்று இலங்கை சிறையில் அடைப்பதும், சிறையில் சித்திரவதை செய்வதும், மீனவர்களின் வலை, படகு இயந்திரம், உடமைகளை பறிப்பதும் தொடர்கிறது. கடந்த 20 ஆண்டுகளில் 6 ஆயிரம் மீனவர்கள் தாக்கப்பட்டுள்ளனர். 500 மீனவர்கள் உயிரிழந்தனர். தற்போது இலங்கை கடற்படை தாக்குதல் அதிகரித்துள்ளது- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திடீரென்று இடைநிறுத்தப்பட்டது நாகை-காங்கேசன் கப்பல் சேவை!

## எரிபொருள் இல்லாமையே காரணம்

யாழ்ப்பாணம், செப். 07

**நாகப்பட்டினத்துக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் பயணத்தில் ஈடுபடும் கப்பலானது நேற்று முன் தினம் வியாழக்கிழமை பயணத்தில் ஈடுபடவில்லை.**

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இந்த கப்பல் சேவையானது உத்தியோப்பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. இந்நிலையில் நேற்று முன்தினம் காலை நாகைப்பட்டினத்தில் இருந்து புறப்பட்டு காங்கேசன்துறையை குறித்த கப்பல் வந்தடைந்தது.

இவ்வாறு வந்த கப்பல் காங்கேசன்துறையில் இருந்து நாகைபட்டினத்துக்கான பயணத்தை ஆரம்பிப்பதற்கு தயாரானது.

இந்நிலையில், பயணிகளும் கப்பலில் ஏறிப் பயணத்துக்கு தயாராக இருந்தனர்.

இருப்பினும், கப்பலில் போதிய அளவு எரிபொருள் இன்மையினால் குறித்த பயணம் இடைநிறுத்தப்பட்டது. பயணத்திற்கு தயாராக இருந்த பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

(அ)

# விடுதியில் பெண்ணின் சடலம்!

கொழும்பு, செப். 07

சீதுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விடுதி ஒன்றில் பெண் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று முன் தினம் மாலை படுகொலை செய்யப்பட்ட பெண் ஒருவரின் சடலம் கட்டுநாயக்கா, பிரேஸ் லைன் வீதி, அமண்டொலுவ, மெரினா மாவத்தை இலக்கம் 05 இல் அமைந்துள்ள தங்கும் விடுதியொன்றின் படுக்கையில் இருந்து கண்டெடுக்கப்பட்டது.

பலதுருவெல்ல, சேரன்கடவைச் சேர்ந்த எம். ஷிரோமி புஷ்பலதா (வயது 43) என்பவரே கொல்லப்பட்டார். அவர் ஒரு குழந்தைக்குத் தாய் என்பது பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கொலை செய்யப்பட்ட பெண், அந்த தங்கும் விடுதியில் தனது கணவன் என குறிப்பிட்ட ஆண் ஒருவருடன் 9 வருடங்களாக வசித்து வந்ததுடன், கட்டுநாயக்க ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தில் பணிபுரிந்து வந்துள்ளார். அவரது குழந்தை உறவினர் ஒருவரின் பராமரிப்பில் வளர்ந்து வந்தத.

பெண்ணின் கொலைக்கு பிறகு அந்த நபர் தலைமறைவாகிவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை சீதுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# பஸ் விபத்தில் 47 பேர் காயம்

கொழும்பு, செப். 07

பிபில, நாகல பிரதேசத்தில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற பஸ் விபத்தில் 47 பேர் காயமடைந்துள்ளனர்.

பிபில, நாகல பிரதேசத்தில் இரண்டு பேருந்துகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் காயமடைந்த 47 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பிபில பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிபில - அம்பாறை வீதியில், நாகல பிரதேசத்தில் பிபிலையில் இருந்து அம்பாறை நோக்கி பயணித்த தனியார் பேருந்து ஒன்றும், பின்னால் அதே திசையில் பயணித்த பேருந்தும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் இரண்டு பேருந்துகளிலும் பயணித்த 47 பயணிகள் காயமடைந்து பிபில வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பிபில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# 843 கிலோ பீடி இலைகள் சிலாபம் பகுதியில் மீட்பு

கொழும்பு, செப். 07

சிலாபம் - மயிலம்குளம் களப்பு பகுதியில் இருந்து ஒரு தொகை பீடி இலைகள நேற்று முன் தினம் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேற்கு கடற்படை கட்டளையின் ரங்கல கடற்படையினர், சிலாபம் களப்பு பிரதேசத்தில் உள்ள காட்டுப் பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். குறித்த களப்பு பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 28 மூடைகளை கைப்பற்றிய கடற்படையினர் சோதனையிட்டபோது, அவ் உர மூடைகளில் இருந்து 843 கிலோ 950 கிராம் பீடி இலைகள் மீட்கப்பட்டுள்ளன.

மேலும் குறித்த பீடி இலைகள் அடங்கிய மூடைகளுடன், அமோனியம் காபனேட் எனும் இரசாயன திரவப் பொருள் 25 கிலோ கிராம் அடங்கிய மூடையொன்றும் இதன்போது மீட்கப்பட்டுள்ளதாகவும் கடற்படையினர் குறிப்பிட்டனர்.

குறித்த பீடி இலைகளை கடல் மார்க்கமாக இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் விற்பனை செய்யும் நோக்கில் இவ்வாறு எடுத்து வந்திருக்கலாம் எனவும் சந்தேகிப்பதாக கடற்படையினர் குறிப்பிட்டனர்.

இவ்வாறு கடற்படையினரால், கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மற்றும் அமோனியம் காபனட் இரசாயன பொருள் அடங்கிய மூடை என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக வாய்கால கலால் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளதாகவும் கடற்படையினர் மேலும் தெரிவித்தனர். (அ)

# மியன்மார் அடிமை முகாமில் இருந்த 20 இலங்கையர்கள் நாடு திரும்பினர்!

மியான்மாரில், ஆயுதம் தாங்கிய குழுவொன்றின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 20 இலங்கையர்கள் நாட்டை வந்தடைந்தனர்.

குறித்த 20 இலங்கையர்களும் நேற்று முன் தினம் நாட்டை வந்தடைந்தாக தெரிவிக்கப்படுகின்றது. சர்வதேச ஏதிலிகளுக்கான அமைப்பின் அனுசரணையில் தாய்லாந்தின் பாங்கொக்கில் இருந்து அவர்கள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். (அ)

உத்திக பிரேமரத்னவின் கார் மீது சூடு;

# உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சஞ்சீவ மஹாநாம கைதானார்!

கொழும்பு, செப். 07

பொதுஜன பெரமுனவின் அனுராதபுரம் மாவட்ட முன்னாள் உறுப்பினர் உத்திக பிரேமரத்தினவின் கார் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய குற்றச்சாட்டின் பேரில் மலேசியாவுக்குச் சென்ற உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சஞ்சீவ மஹாநாம, கைது செய்யப்பட்டுள்ளார். மாலபேயில் உள்ள சர்ச்சைக்குரிய கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரின் வீட்டில் தங்கியிருந்த அவரை, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம், பொலிஸாரின் தகவலுக்கு அமைய குறித்த வர்த்தகரின் வீட்டைச் சுற்றிவளைத்த பின்னரே கைது செய்யப்பட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்னவின் வாகனம் மீது தனது கடமை துப்பாக்கியால் சுடப்பட்டதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்ததை அடுத்து, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சஞ்சீவ மஹாநாம தனது மனைவி மற்றும் பிள்ளைகளுடன் ஜூன் 12 ஆம் திகதி பொலிஸ் திணைக்களத்திற்குத் தெரிவிக்காமல் மலேசியாவுக்குச் சென்றிருந்தார். நாட்டை விட்டு வெளியேறிய அவர் தனது சட்டத்தரணிகள் ஊடாக அனுராதபுரம் நீதிமன்றில் மனுவொன்றை சமர்ப்பித்து இந்த வழக்கிலிருந்து விடுவிக்குமாறு கோரியுள்ளார்.

அநுராதபுரத்தின் முன்னாள் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சஞ்சீவ மஹாநாமவை சந்தேக நபராக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் பெயரிட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பான வழக்கில் இருந்து முன்னாள் உதவி பொலிஸ் அத்தியட்சகர் சஞ்சீவ மஹாநாமவை விடுவிக்குமாறு முன்னதாக நீதிமன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த மனுவை நிராகரித்த அனுராதபுரம் மேலதிக நீதவான் மனோதி ஹேவாவசம், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முறைப்படி மேற்கொண்டு சந்தேக நபர்களை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை, சஞ்சீவ மஹாநாம நாடு திரும்பி தலைமறைவாகியுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் அவர் மீண்டும் வெளிநாடு செல்வதற்கு தடை விதித்து நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

உத்திக பிரேமரத்னவின் கார் மீது கடந்த ஆண்டு செப்ரெம்பர் 18 ஆம் திகதி இரவு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. உத்திக பிரேமரத்ன தனது நண்பர்கள் சிலருடன் மதுபான விருந்து ஒன்றில் ஈடுபட்டிருந்தபோது, மதுபானப் போத்தல்கள் எடுப்பதற்காக வீட்டுக்கு வந்தபோது வீட்டின் முன் நிறுத்தப்பட்டிருந்த கார் மீது ஒருவர் துப்பாக்கியால் சுட்டதாக பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். துப்பாக்கிச் சூடு இடம்பெற்ற போது உத்திக பிரேமரத்னவின் மெய்ப்பாதுகாவலர்கள் வீட்டுக்குள் இருந்துள்ளனர்.

துப்பாக்கிச் சூடு தொடர்பான விசாரணையை குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்ற அப்போதைய காவல் கண்காணிப்பாளர் சி.டி. விக்கிரமரத்ன நடவடிக்கை எடுத்ததுடன், உத்திக பிரேமரத்னவும் தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறி எம்.பி. பதவியை இராஜினாமா செய்து கனடாவுக்கு சென்றுள்ளார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் நீண்ட விசாரணையில், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், உத்திகவின் உத்தியோகபூர்வ வாகனமாகப் பயன்படுத்திய தனியார் வாகனத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாகவும், இது உத்திக பிரேமரத்னவுக்குத் தெரிந்தே மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட செயல் எனவும் தெரியவந்துள்ளது. அப்போது உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சஞ்சீவ மஹாநாம பயன்படுத்திய கடமைத் துப்பாக்கியால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்திருந்தது. துப்பாக்கிச் சூடு நடந்த சில நாட்களுக்குப் பிறகு, அவர் துப்பாக்கியை பொலிஸ் மத்திய ஆயுதக் களஞ்சியத்தில் ஒப்படைத்துவிட்டு மற்றொரு ஆயுதத்தைப் பெற்றுள்ளார் என்பது தெரியவந்தது. விசாரணையில், எந்த குறைபாடும் இல்லையென்றாலும் பொய் சொல்லி ஆயுதம் மத்திய களஞ்சியசாலையில் ஒப்படைக்கப்பட்டமை தெரியவந்துள்ளது. குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் பெறப்பட்டு பரிசோதகரிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில், உத்திக பிரேமரத்னவின் காரை நோக்கிச் சுட்ட ஆயுதமும் இந்த ஆயுதமும் ஒன்றே என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி, இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சந்தேக நபராக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சஞ்சீவ மஹாநாமவை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் பெயரிட்டுள்ளது.

சந்தேகத்தின் பேரில் மாலபேயில் வைத்து கைது செய்யப்பட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் கைது செய்யப்பட்டதன் பின்னர், அவர் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு அழைத்து வரப்பட்டு துப்பாக்கிச் சூடு தொடர்பில் நீண்ட நேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். அவர் அனுராதபுரம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

(அ)

# சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட சிகரெட்டுகளுடன் ஒருவர் சிக்கினார்

கொழும்பு, செப். 07

சுங்கவரி செலுத்தாமல் சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட சிகரட்டுகளுடன் சந்தேக நபரொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்முனை பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் நேற்று முன் தினம் இந்தியாவிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது, சந்தேக நபரிடமிருந்து 9400 சிகரெட்டுகள் அடங்கிய 47 சிகரெட்டு கார்ட்டூன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எம்.எவ்., வெளிநாட்டு கடன் ஒப்பந்தங்கள் மீறப்படில் நாட்டின் எதிர்காலத்துக்கு ஆபத்து

## ஜனாதிபதி ரணில் எச்சரிக்கை

கொழும்பு, செப். 07

**ஐ.எம்.எவ் மற்றும் வெளிநாட்டு கடன் வழங்குநர்களுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் மீறப்பட்டால், எதிர்காலத்தின் மீது நம்பிக்கை வைக்க முடியாது எனவும், வெளிநாட்டு கடன் வழங்குனர்களுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் திருத்தமின்றி அமுல்படுத்தப்பட்டால் நாட்டுக்கு சிறந்த எதிர்காலம் கிடைக்கும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**



கொழும்பு துறைமுக நகரத்தில் நிர்மாணிக்கப்பட்ட "த மால்" வரியில்லா வர்த்தக தொகுதியை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று முன் தினம் பிற்பகல் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று துறைமுக நகரத்தில் இந்த வரியில்லா வர்த்தக தொகுதி திறந்து வைக்கப்பட்டுள்ளமை மிக முக்கியமானதாகும்.

இலங்கையின் சுற்றுலா துறை உலக அளவில் பிரசித்தம் பெற்றுள்ளது.

இந்த வர்த்தகக் கட்டிட தொகுதி இருப்பதால் சுற்றுலாப் பயணிகள் இங்கு வருவார்கள். அவர்களுக்குத் தேவையான பொருட்கள் கிடைக்கும் வகையில் வணிக வளாகங்களை நிர்மாணித்து இந்த துறைமுக நகரத்தை மேம்படுத்தியுள்ளோம்.

இது துறைமுக நகரத்தின் ஆரம்பமாக மட்டுமே அமையும். துறைமுக நகரை இவ்வாறு அபிவிருத்தி செய்ய முடியும் என்ற நம்பிக்கை இரண்டு வருடங்களுக்கு முன்னர் எமக்கு இருக்கவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன் நாட்டில் பொருளாதார ஸ்திரத் தன்மையை ஏற்படுத்தியதன் காரணமாகவே இன்று இப்பணியை செய்ய முடிந்துள்ளது.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் கடன் வழங்கிய 18 நாடுகளுடன் இந்த வேலைத் திட்டத்தை தொடர்வதற்கு நாம் உடன்படிக்கை செய்துள்ளோம். அந்த ஒப்பந்தங்களை மாற்றாமல் தொடர்ச்சியாக கொண்டுச் சென்றால் இலங்கைக்கு நல்ல எதிர்காலம் கிட்டும். அந்த உடன்படிக்கைகளில் திருத்தம் செய்ய முற்பட்டால், எதிர்காலம் கேள்விக்குறியாகும்.

குறிப்பாக 100 நிறுவனங்கள் இன்று துறைமுக நகரம் குறித்து கவனம் செலுத்தியுள்ளன. அதில் 74 நிறுவனங்கள் இந்த வருட இறுதிக்குள் இலங்கையில் முதலீடு செய்யவுள்ளன. மேலும், கொழும்பு கோட்டையில் புதிய சுற்றுலா வலயத்தை ஆரம்பிக்க உள்ளோம்.

இதனால், இப்பகுதிகளுக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். பொலிஸ் தலைமையகம் இடம் மாற்றப்பட்டுள்ளது. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சும் புதிய கட்டிடத்திற்கு மாறுகிறது. குடியரசு சதுகத்தையும் புதுப்பித்து, அந்தப் பகுதியை சுற்றுலா வலயமாக மாற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேநேரம் பழைய தபால் நிலைய கட்டிடத்தை சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கு பயன்படுத்த முடியும்.

பழைய துறைமுகம் மற்றும் அதன் இறங்குதுறை மற்றும் பழைய சுங்க கட்டிடம் உள்ளிட்ட அனைத்தையும் சுற்றுலா அபிவிருத்திக்கு பயன்படுத்த முடியும். கடற்படைத் தலைமையகம் தற்போது அக்குரேகொடைக்கு மாற்றப்பட்டுள்ளதால், பழைய இடத்தில் புதிய ஹோட்டல்களை அமைக்கலாம். தற்போதுள்ள ஜனாதிபதி மாளிகை சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கு பயன்படுத்தி விரிவான சுற்றுலாத்துறையை உருவாக்க திட்டமிட்டிருக்கிறோம்-என்றார்.

(அ)

# மூவின மக்களும் இணைந்த அரசே எங்கள் எதிர்பார்ப்பு!

## ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார

வவுனியா, செப். 07

வடக்கு கிழக்கு தெற்கு என, மூவின மக்களும் இணைந்த அரசாங்கமே, தமது எதிர்பார்ப்பாகும் எனவும், அனைத்து இன மக்களின் உரிமைகளையும் உறுதி செய்யும் வகையில், புதிய ஒரு அரசியலமைப்பை உருவாக்குவோம் எனவும், தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.



வவுனியா குருமன்காட்டில் அமைந்துள்ள, கலைமகள் மைதானத்தில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில், இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சம்பிக்க ரணவக்க, ரிஷாத் பதியூதீன் ஆகியோர், சஜித்துடன் இருக்கின்றனர்.

சஜித் பிரேமதாச வவுனியாவுக்கும் மன்னாருக்கும் வருகை தரும் போது, சம்பிக்க ரணவக்கவை கூட்டிவர மாட்டார்.

ஆனால், காலிக்கு செல்லும் போது, சம்பிக்கவை அழைத்துச் செல்வார்.ஆனால், அங்கு ரிஷாத் பதி யூதீனை கூட்டிப்போக மாட் டார். என்ன அரசியல் இது.இதுதான் இரட்டை அரசியல் கொள்கை இருப்பது, தேசிய மக்கள் சக்தியிடம் மாத்திரமே.

நாங்கள், அனைத்து இன மக்களின் உரிமைகளையும் உறுதி செய்யும், புதிய ஒரு அரசியலமைப்பை உருவாக்குவோம்.

பிரதேச சபைகளில் இருந்து, அதிகாரப் பகிர்வை வழங்கும்படியான ஒரு அரசியலமைப்பு உருவாக்கப்படும்.

இனவாதத்தை மூலதனமாக்கி ஆட்சியை பெற்ற மொட்டுக் கட்சி, இன்று சுக்குநூறாகிப் போயுள்ளது. இனவாதம் சாதி வாதத்திற்கு, தேசிய மக்கள் சக்தியில் இடமில்லை. இப்போதே இந்த நாட்டை கட்டியெழுப்ப ஆரம்பிக்க வேண்டும். விவசாயத்தை பாதுகாக்க வேண்டும். வடக்கு கிழக்கு தெற்கு மக்களின் நம்பிக்கையினை வென்ற ஒரு அரசாங்கமே எங்களுக்குத் தேவை.

இதற்கு முந்தைய ஜனாதிபதிகள் உருவானது, தெற்கில் இருந்து மட்டுமே.

இம்முறை வடக்கு கிழக்கு தெற்கு மக்கள் இணைந்து, தேசிய மக்கள் சக்தியை வெற்றி பெறச்செய்ய வேண்டும்.

கள்வர்களை, நாட்டையும் பொருளாதாரத்தையும் சீர்குலைத்தவர்களை, போதைப் பொருள் வியாபாரிகளை,

உலகத்திடம் எங்களை அவமானப்படுத்தியவர்களை, போரை உருவாக்கியவர்களை, மூவின மக்களிடையில் சண்டைகளை உருவாக்கியவர்கள் என, அனைவரையும் ஒன்றாக தோற்கடித்து, நாட்டை பசுமையாக்கி, மக்களின் வாழ்க்கையை அழகாக்கும் ஒரு புதிய அரசாங்கத்தை அமைக்க பாடுபடுவோம்-என்றார்.

(அ)

# என் அரசியல் பயணத்தை யாருமே தடுக்க முடியாது!

## இராஜாங்க அமைச்சர் அநுராத

கொழும்பு, செப். 07

தமது அரசியல் பயணத்தை அச்சுறுத்தல்களின் ஊடாக தடுத்துவிட முடியாது என இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாம் இன்னும் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களாகவே இருக்கிறோம். எம்மை கட்சியிலிருந்து நீக்க முடியாது. அச்சுறுத்தல்களின் ஊடாக எமது அரசியல் பயணத்தை தடுத்துவிட முடியாது.

நாம் கட்சியின் தனிப்பட்ட நலனைப் பாராது நாட்டினதும் நாட்டு மக்களினதும் எதிர்காலம் குறித்து சிந்தித்தோம். ஆதலால்தான் சுயேச்சை வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கத் தீர்மானித்தோம்.

தற்போதைய சூழ்நிலையில் நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்லக் கூடிய ஆளுமை ரணில் விக்கிரமசிங்கவுக்கே உள்ளது. ரணில்-சஜித் இணைவது குறித்து ஒருசிலர் கருத்து வெளியிட்டுள்ளார்கள். அவ்வாறாயின் அதனை சாதகமாக எடுத்துக்கொண்டு நாம் முன்னோக்கிச் செல்வோம்-என்றார்.

(அ)

# தேர்தலில் ரணிலின் தோல்வி உறுதியானது

## கூறுகிறார் மரிக்கார்

கொழும்பு, செப். 07

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் தோல்வியை தழுவுவதை நன்கு அறிந்து கொண்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையத்தில் இடம்பெற்றது.மஹியங்கனையில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரக்கூட்டத்தின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சஜித் பிரேமதாசவால் அநுரகுமார திசாநாயக்கவை வெற்றி கொள்ள முடியாது என்ற கருத்தை தெரிவித்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி தேர்தலை வெற்றிகொள்வேன் என கூறிக்கொண்டு தேர்தலில் களமிறங்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது தன்னால் வெற்றிபெற முடியாது என்பதை அறிந்து கொண்டுள்ளார்.இந்நிலையில் அவரால் வெற்றிபெற முடியாது என்பதால் சஜித் பிரேமதாசவை தோற்கடிக்க வேண்டும் என்பதே அவருடைய முதல் நோக்காக உள்ளது. அதன் காரணமாக ஐக்கிய தேசிய கட்சியை சேர்ந்தவர்



களிடம் மறைமுகமாக தான் தோல்வியை தழுவவுள்ளதால் அநுரவிற்கு வாக்களியுங்கள் என கூற முயல்கின்றார்.

ரணில் அநுர கொடுக்கல் வாங்கல்களே இதன் ஊடாக வெளிப்படுகின்றது. ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கும் விடயத்தில் நான் முன்னிலையில் இருந்துள்ளேன். அதே போன்று ஊழல் மோசடிகளுக்கு எதிராக செயற்படும் நபர் என்ற வகையில் ஜனதிபதியின் கருத்திற்கு எதிர்ப்பை தெரிவித்துக்கொளள்ள விரும்புகின்றேன். சஜித்தின் வெற்றியைக்கண்டு அச்சமடைந்துள்ளனர்-என்றார்.

# யுத்த காலத்தில்கூட இதுபோன்ற நெருக்கடியை கண்டிருக்கவில்லை!

கொழும்பு, செப். 07

கடந்த இரு வருடங்களுக்கு முன்பு கண்ட நெருக்கடியை யுத்த காலத்தில்கூடக் கண்டிருக்கவில்லை என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

மத்துகம தனியார் பேருந்து நிலையத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்ற 'இயலும் சிறீ லங்கா' வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பிரதமர் தினேஷ் குணவர்தன இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-



கடந்த இரு வருடங்களுக்கு முன்பு கண்ட நெருக்கடியை யுத்த காலத்தில்கூடக் கண்டிருக்கவில்லை. அந்த நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வந்தபோது எதிர்க்கட்சி தலைவர்கள், அதற்கும் ஆதரவளிக்கவில்லை.

ஆனாலும் நெருக்கடிகளைத் தீர்த்து சுமூகமான நிலையை ஏற்படுத்தும் இயலுமையும் அனுபவமும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு இருந்தது. அதனாலேயே அவரிடம் நாட்டின் ஆட்சியை ஒப்படைக்க நாங்கள் தீர்மானித்திருந்தோம்-என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வைத்திய முறைமையை பாதுகாத்து விரிவாக்க நடவடிக்கை!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



கொழும்பு, செப். 07

**தேசிய வைத்திய முறைமையை பாதுகாத்து விரிவாக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். நேற்று இடம்பெற்ற இயலும் சிறீ லங்கா தேசிய வைத்திய மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய வைத்திய முறைமையை பாதுகாத்து விரிவாக்கம் செய்ய வேண்டும். தேசிய வைத்திய முறைமையினுள் பாரம்பரிய வைத்தியர்கள், ஆயர்வேத வைத்தியர்கள் உள்ளிட்டவர்கள் உள்ளனர். இந்த வைத்திய முறைமைகளே 200 வருடங்களுக்கு முன்னர் தெற்காசியா பூராகவும் இருந்தது. அந்த அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்த வைத்திய முறைமையாக காணப்பட்டது. புதிய சட்டத்தை கொண்டு வந்து அனைத்து துறைகளையும் பதிவு செய்ய வேண்டும். என்னுடைய கருத்திற்கு அமைய தேசிய ஆயுர்வேத சபை அமைக்கப்பட வேண்டும். அதன் ஊடாக தேசிய வைத்திய முறைமையின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேசிய வைத்திய முமையை மறுசீரமைக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். ஆயுர்வேத வைத்திய முறைமையை ஆங்கில வைத்திய முறைமைக்கு நிகராக மாற்ற வேண்டும். அதன் ஊடாக ஆயுர்வேத சுற்றுலாவை உள்வாங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார்.(அ)

# தமிழர் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என்கிறார் சீலரத்ன தேரர்

மன்னார், செப். 07

சுமந்திரன் போன்றவர்கள் அதிகாரத்தைப் பெற என்ன வேண்டுமானாலும் செய்வார்கள் என ஜனசெத முன்னணியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான பத்தர முல்லை சீலரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

அவர்களின் பிள்ளைகள் வெளிநாடுகளில் சிறப்பான வாழ்க்கை வாழ்கிறார்கள். ஆனால் வடமாகாணத்தில் வாழும் அப்பாவித் தமிழர்களுக்கு இதுவரை எந்த தீர்வும் எட்டவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

மன்னார் பேருந்து நிலையத்தில், மக்கள் மத்தியில் மேற்கொண்ட தேர்தல் பிரச்சாரத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

"தாய் நாட்டின் சுபீட்சமான எதிர்காலத்துக்காக மக்கள் இன, மத பேதமின்றி ஒன்றிணைய வேண்டும்.

தமிழ் அரசியல் கட்சிகள் சஜித் பிரேமதாஸவுக்கு தங்கள் ஆதரவை வழங்கி ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளனர். இங்கு சஜித் பிரேமதாச மட்டுமல்ல ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உட்பட அனைத்து அரசியல் கட்சிகளுமே கூட்டணிகள் உருவாகும் போது ஒப்பந்தங்களை தூக்கி எறிந்து விடுவார்கள்.

அனுரகுமார திஸாநாயக்க, நாமல் ராஜபக்ஷ போன்றவர்களும் அவ்வாறானவர்களே. இவ்வாறான தலைவர்களை தேர்வு செய்தால் மேலும் பாதிப்படைவது வடக்கு, கிழக்கு மக்களே.

அப்பாவிப் பொது மக்களை வைத்து அவர்கள் அரசியல் செய்கிறார்கள். எனவே தமிழ் மக்கள் சிந்தித்து உங்கள் வாக்குகளை டிரக்ரர் சின்னத்துக்கு அளிக்க வேண்டும்-என்றார்.

(அ)

# பச்சை, சிவப்பு யானைகள் ஓர் அணியாக சேர்ந்துள்ளன

## சஜித் பிரேமதாஸ கூறுகிறார்

கொழும்பு, செப். 07

அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாகுவார் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்து அமைகின்றது. பச்சை யானை குட்டிகளும், சிவப்பு யானை குட்டிகளும் இன்று ஒன்றாக சேர்ந்து இருக்கின்றது. இதனூடாக ரணில் விக்கிரமசிங்கவுக்கு வெற்றி பெற முடியாது என்பது வெளிப்படையாகியுள்ளது. எனவே உங்கள் வாக்குகளை வீணடிக்காமல் நாட்டை கட்டி எழுப்புவதற்காக ஐக்கிய மக்கள் சக்திக்கும், ஐக்கிய மக்கள் கூட்டமைப்புக்கும் வாக்களிக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி காரர்களிடம் வேண்டுகோள் விடுப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்த 34 ஆவது மக்கள் வெற்றி பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் தலைமையில் மினுவாங்கொடையில் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

வங்குரோத்தடைந்த நாட்டைக் கட்டி எழுப்புவதற்கு பாரிய அபிவிருத்திகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கான நிதி திரட்டப்பட வேண்டும். 76 வருட வரலாற்றை மாற்றிய ஐக்கிய மக்கள் சக்தி ஆயிரம் மில்லியன் பெறுமதியான சேவைகளை நாட்டுக்காக செய்திருக்கின்றது. கல்வித் துறையையும் சுகாதாரத் துறையும் மேம்படுத்துவதற்காக சேவைகளை செய்திருக்கின்றது என எதிர்க்கட்சித் தலைவர் இதன் போது சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய மக்கள் சக்தி நாட்டுக்காக சேவை செய்தபோது அநுரவும் ரணிலும் அச்சமடைந்தார்கள். நாம் சேவை செய்யும்போது அவர்கள் அதனை பரிகாசித்தார்கள். இந்த பரிகாசங்கள் காரணமாக இன்று நாடு வங்கரோத்தடைந்திருக்கிறது. எனவே இந்த அரசாங்கமும் மக்கள் விடுதலை முன்னணியும் சொல்கின்ற பொய்களை நம்பி ஏமாற வேண்டாம்.

ரணிலுக்கும் அனுரவுக்கும் நினைக்க முடியாத அளவு நிவாரண தொகையை இந்த நாட்டுக்கு கொண்டு வருவதற்கு நான் நடவடிக்கை எடுப்பேன். அவை கடன் அல்ல அது நிவாரணமாகும் என எதிர்க்கட்சித் தலைவர் இதன் போது குறிப்பிட்டார். (அ)

# தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு கோரி யாழில் துண்டுப்பிரசுரங்கள் விநியோகம்

யாழ்ப்பாணம், செப். 07

தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவுகோரி யாழ்ப்பாணத்தில் நேற்று துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

"நமக்காக நாம்" பிரசார பயணத்திற்கு வலுச் சேர்க்கும் வகையில் நேற்று யாழில் தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பினர் பரப்புரை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலைய பகுதியில் நேற்று முற்பகல் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பில் அங்கம் வகிக்கும்



தமிழ்த் தேசிய கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், முன்னாள் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள் என பலர் இதில் கலந்துகொண்டனர். (அ)

# 'ரணிலை அறிந்துகொள்வோம்' இன்று முதல் சூறாவளி பிரசாரம்

சுயேச்சை வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் நோக்கில் "ரணிலை அறிந்து கொள்வோம்" எனும் பிரசார நிகழ்ச்சி நாடளாவிய ரீதியில் இன்று காலை 8.00 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

09 மாகாணங்கள், 160 தேர்தல் தொகுதிகள், 341 உள்ளூராட்சி மன்றங்கள், 4984 வட்டாரங்கள், 14026 கி.உ. பிரிவுகள் மற்றும் 53 896 கிராம வீதிகளை உள்ளடக்கிய இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக, அரசியல், சமூக மற்றும் கலாசார ரீதியில் ரணில் விக்ரமசிங்கவின் பாத்திரத்தை மக்களுக்கு அறிந்து கொள்ள வாய்ப்பளிக்கப்படும்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் "இயலும் ஸ்ரீலங்கா" விஞ்ஞாபனத்தின் துண்டுப் பிரசுரங்கள் விநியோகம் மற்றும் மக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் இதன் கீழ் ஏற்பாடு செய்யப்படவுள்ளன.

மீண்டும் வரிசையில் நிற்கும் யுகத்தை எதிர்கொள்ளாத வகையில் பொருளாதார ஸ்திரத் தன்மை கொண்ட நாட்டில் மக்களின் எதிர்பார்ப்புகளையும் நம்பிக்கையையும் ஒருங்கிணைக்கும் இந்தப் பிரசாரத்தில் இணையுமாறு அனைத்துத் தரப்பினருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(அ)

# "மகிந்தவை முன்மாதிரியாக கொண்டே செயல்படுவேன்"

கொழும்பு, செப். 07

தாம் நடைமுறைக்கு மாறான தேர்தல் வாக்குறுதிகளை வழங்கமாட்டேன் என்றும் நாட்டின் ஜனாதிபதியாக தேர்வானால் அமுல்படுத்த முடியும் என்ற கொள்கைகளை மட்டுமே முன்வைப்பதாகவும் சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

தெஹிவளையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

மேலும் கருத்து தெரிவித்த நாமல்,

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் முன்மாதிரியை பின்பற்றி, அரச துறையை மூலோபாய வேலைத்திட்டத்துடன் விரிவுபடுத்த விரும்புகிறேன்.

நடைமுறையான கொள்கைகளை மாத்திரமே நாங்கள் முன்மொழிகிறோம் மற்றும் யதார்த்தமாக நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை வழங்குவதைத் தவிர்க்கிறோம்.

அரசு துறையை வலுப்படுத்த வேண்டும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். தபால் மூல வாக்குப்பதிவு இடம்பெற்று வரும் நிலையில் சம்பளம் உயர்த்தப்பட்டு அரசு ஊழியர்கள் பாராட்டப்பட்டனர். எவ்வா... முன்னாள் அரசாங்க ஊழியர்களை எவ்வாறு நடத்தினார்கள் என்பதை நாங்கள் பார்த்தோம்.

அரச துறையை விரிவுபடுத்தியவர் மஹிந்த ராஜபக்ச, அவர் அரசியல் அதிகாரத்தினால் அல்ல, தொலைநோக்கு மற்றும் மூலோபாய வேலைத்திட்டத்தின் மூலம் இதனை சாதித்தார். மாகாண சபைகள், விமான நிலையங்கள், வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் பட்டதாரிகளை அரசாங்கத் துறையில் ஒருங்கிணைத்தல் ஆகியவை அவரது முயற்சிகளில் அடங்கும்.

நாங்கள் ஆட்சி அமைக்கும் போது, நாட்டுக்கு பாதகமான சட்டமூலங்களை நிறைவேற்றுவதை தவிர்ப்போம். இந்த நாட்டை பிளவுபடுத்த எந்த கட்சியையும் அனுமதிக்க மாட்டோம். நாட்டின் அபிவிருத்தியை மையமாகக் கொண்ட வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவோம்-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்கடத்தலை தடுக்க விழிப்புணர்வு திட்டம்

## கிழக்கில் வெற்றிகரமாக முன்னெடுப்பு



**கல்முனை, செப். 07**

**புலம்பெயர் தொழில் பாதுகாப்பு மற்றும் ஆட்கடத்தலை தடுக்கும் கிராம மட்ட விழிப்புணர்வு திட்டம் கிழக்கில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.**

பாதுகாப்பான புலம்பெயர் தொழில் மற்றும் ஆட்கடத்தலுக்கு உள்ளாவதை தடுக்கும் நோக்கில் விழிப்புணர்வு வேலைத் திட்டத்தை மனித அபிவிருத்தி தாபனம் செயல்படுத்தி வருகிறது. இதன் தொடர்ச்சியாக இலங்கையில் ஆட்கடத்தலை எதிர்த்து சமுதாய - நியாய பிரசாரம் எனும் செயல்பாட்டின் ஊடாக கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் நிந்தவூர், கல்முனை, காரைதீவு ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் இந்த விழிப்புணர்வு திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

கிராம மட்டங்களில் பிரச்னைகளுக்கு முகங்கொடுத்தவர்கள், கிராம மட்ட தலைவர்கள் மற்றும் பெண்கள் எனப் பலரும் இந்த திட்டங்களில் பங்குபற்றினர்.

மனித அபிவிருத்தி தாபன அம்பாறை மாவட்ட பிரதி இணைப்பாளர் எம். ஐ. றியாழின் நெறிப்படுத்தலில் நடைபெற்றுவரும், இந்த விழிப்புணர்வு செயல்பாடுகளில் குறித்த பிரதேச செயலகத்தில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வளவாளர்களாக கலந்து கொண்டு பாதுகாப்பான புலம்பெயர் தொழில் மற்றும் ஆட்கடத்தலுக்கு உள்ளாதல் தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தி வருகின்றனர். (எ)





# மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் அம்பாறை அரச அதிபர் வழங்கினார்

காரைதீவு, செப். 06

அம்பாறை, காரைதீவு பிரதேசத்தில் பொருளாதார ரீதியாக இடர்படும் 10 குடும்பங்களின் பிள்ளைகளுக்கு உலர் உணவுப் பொருட்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள், துவிச்சக்கரவண்டிகள் என்பனவற்றை அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்கிரம வழங்கினார்.

சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தரின் ஒழுங்கமைப்பில் உதவி பிரதேச செயலாளர் எஸ். பார்த்தீபன் தலைமையில் யுனிசெப் நிறுவனத்தின் உளநல உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இவ் உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

சிறுவர் கழகங்ளை வலுப்படுத்தும் நோக்குடன் சிறுவர் நூலகங்களுக்குத் தேவையான பொருட்கள், புத்தகங்கள், கதிரை மேசைகள் மற்றும் விளையாட்டு உபகரணங்களும் இதன்போது வழங்கப்பட்டன. (எ)



# சித்திரத்தேர் வெள்ளோட்டம்

காரைதீவு, செப். 07

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற காரைதீவு பாலையடி வால விக்னேஸ்வரர் ஆலயத்தின் முதலாவது சித்திரத் தேரின் வெள்ளோட்டம் நேற்று வெள்ளிக்கிழமை காலை நடைபெற்றது.

39 இலட்சம் ரூபாய் செலவில் 21 அடி உயர சித்திரத்தேர் ஆலயத்துக்கு அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

இதுவே காரைதீவு வரலாற்றில் முதலாவது சித்திரத்தேராகும்.

இதேவேளை இன்று சனிக்கிழமை காலை தேர்த்திருவிழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை சமுத்திர தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (எ)


# மீலாதுன் நபி விழாவை முன்னிட்டு கல்முனையில் கொடியேற்ற ஊர்வலம்

கல்முனை, செப். 07

கல்முனை மாநகரில் மீலாதுன் நபி விழாவை முன்னிட்டு மீலாத் கொடியேற்ற ஊர்வலம் நடைபெற்றது.

கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் மற்றும் கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் நாகூர் ஆண்டகை தர்ஹா ஷரீப் பரிபாலன சபை ஏற்பாடு செய்திருந்த மீலாத் கொடியேற்ற ஊர்வலம் நடைபெற்றது.

மீலாதுன் நபி விழாவை முன்னிட்டு றபீஉனில் அவ்வல் மாத ஆரம்ப நிகழ்வாக கல்முனை கடற்கரை பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகை தர்ஹா ஷரீபில் இருந்து முஹ்யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலை மீலாத் கொடியேற்ற ஊர்வலம் சென்றடைந்தது. (எ)





# பாடசாலை மாணவர்களுக்கு நல்லிணக்க பயிற்சி பட்டறை

சம்மாந்துறை, செப். 07



தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகம் ஏற்பாடு செய்த பாடசாலை மாணவர்களுக்கான "நல்லிணக்கம், சகவாழ்வு மற்றும் தேசிய ஒருமைப்பாடு" தொடர்பான பயிற்சிப் பட்டறை சம்மாந்துறை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

சம்மாந்துறை உதவிப் பிரதேச செயலாளர் யூ. எம். அஸ்லம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிரேஷ்ட உளவளத்துணை பயிற்றுவிப்பாளர் மனூஸ் அபூபக்கர் வளவாளராக கலந்து சிறப்பித்தார்.

# உப்பு தொழிற்சாலையில் இலவச மருத்துவ முகாம்

திருகோணமலை, செப். 06

திருகோணமலை - குச்சவெளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கும்புறுப்பிட்டி ரைகம் உப்பு தொழிற்சாலையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்களின் உடல் ஆரோக்கியம் பற்றிய விழிப்புணர்வுடன் சுதேச மருத்துவ நல்வாழ்வு - இலவச ஆயுள் வேத மருத்துவ முகாமொன்று குறித்த தொழிற்சாலை வளாக கட்டடத்தில் நடைபெற்றது.




ரைகம் உப்பு நிறுவனத்தின் வேண்டுகோளுக்கிணங்க, கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் எம். ஏ. நபிலின் அறிவுறுத்தல் மற்றும் ஆலோசனைக்கமைவாக, கோபாலபுரம் மாவட்ட ஆயுள் வேத மருத்துவமனையின் வைத்திய அத்தியட்சகர் எம். நிரஞ்சன் தலைமையில் இந்த ஆயுள் வேத மருத்துவ முகாம் நடைபெற்றது.

தொழிற்சாலையில் கடமையாற்றும் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் தங்களுக்கு நீண்ட நாட்களாக இருக்கின்ற நோய்கள் மற்றும் வலிகள் தொடர்பான மருத்துவ ஆலோசனைகளையும் மருந்துகளையும் பெற்றுக் கொண்டதுடன், இவ்வாறான இலவச மருத்துவ சேவையை வழங்கிய, சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் மற்றும் கோபாலபுரம் ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் உள்ளிட்ட மருத்துவர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்த அதேவேளை, இவ்வாறான மருத்துவ முகாமை இரு மாதத்துக்கு ஒருமுறை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்களை எதிர்கொள்ளும் பொறுப்பை ஏற்கவேண்டும்

## மசூதியில் உரையாற்றிய போப் பிரான்சிஸ்



ஜகார்த்தா, செப். 07

**போர்கள் போன்ற மனிதகுலத்தின் எதிர்காலத்துக்கு அச்சுறுத்தலாக விளங்கும் கடுமையான நெருக்கடிகளை எதிர்கொள்ளும் பொறுப்பை நாம் ஏற்கவேண்டும்- இவ்வாறு போப்பாண்டவர் பிரான்சிஸ் தெரிவித்தார்.**

ஆசிய பசிபிக் நாடுகளில் போப் பிரான்சிஸ் 12 நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். தனது சுற்றுப் பயணத்தின் மூன்றாவது நாளில் இந்தோனேஷியா சென்ற அவர், தலைநகர் ஜகார்த்தாவில் உள்ள தென்கிழக்கு ஆசியாவின் மிகப் பெரிய மசூதியான இஸ்திக்லால் மசூதிக்கு சென்றார். அங்கு மசூதியின் இமாம் ஆன நசுருதீன் உமர் போப் பிரான்சிஸை வரவேற்றார். அங்கு இந்தோனேஷிய அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஆறு மதங்களைச் சேர்ந்த (புத்த மதம், இஸ்லாம், இந்து மதம், கத்தோலிக்க மதம், புரோட்டஸ்டன்ட் மதம், கன்பூசிய மதம்) தலைவர்களும் இருந்தனர்.

போப் பிரான்சிஸை வரவேற்றுப் பேசிய நசுருதீன் தனது உரையில் புவிவெப்பமயமாதல் மற்றும் பருவநிலை மாறுபாடு உள்ளிட்ட பிரச்னைகளை மேற்கோள் காட்டினார். இதன் பிறகு பேசிய போப் பிரான்சிஸ் "நாம் அனைவரும் சகோதரர்கள், யாத்திரிகர்கள். அனைவரும் கடவுளை நோக்கிச் செல்லும் வழியில், வேற்றுமைகள் இருந்தாலும் ஒற்றுமையுடன் முன்னேற வேண்டும். போர்கள் போன்ற மனிதகுலத்தின் எதிர்காலத்தை அச்சுறுத்தும் கடுமையான நெருக்கடிகளை எதிர்கொள்ளும் பொறுப்பை நாம் ஏற்க வேண்டும்- என்றார். (எ)

# பிரான்ஸின் புதிய பிரதமராக மைக்கல் பார்னியர் நியமனம்

பாரிஸ், செப். 07

பிரக்ஸிட் பேச்சுக்களில் முன்னணி வகித்த மைக்கேல் பார்னியரை பிரான்ஸின் புதிய பிரதமராக ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் நியமித்துள்ளதாக எலிஸி அரண்மனை அறிக்கையில் தெரிவித்துள்ளது. 2016 - 2021 வரை ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா வெளியேறுவது தொடர்பிலான பேச்சுகளுக்கு தலைமை தாங்கியவர் மைக்கைல் பார்னியர்.

இந்த நிலையில் கடந்த மே மாதம் நடைபெற்ற தேர்தலில் பிரான்ஸில் தொங்கு பாராளுமன்றம் ஏற்பட்டது.

இடதுசாரி மக்கள் முன்னணி அதிக இடங்களை வென்றது. ஆனால், முழுமையான பெரும்பான்மை பெறவில்லை. இந்த நிலையில்தான் ஜனாதிபதி மக்ரோனால், பிரான்ஸின் புதிய பிரதமராக மைக்கைல் பார்னியர் நியமிக்கப்பட்டுள்ளார். (எ)

# பாடசாலையில் பயங்கர தீ விபத்து; 17 மாணவர்கள் உடல் கருகிப் பலி!

நைரோபி, செப். 07

பாடசாலை விடுதியில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் சிக்கி 17 மாணவர்கள் உடல் கருகிப் பலியாகினர்.

கிழக்கு ஆபிரிக்காவில் உள்ள நாடு கென்யா. இந்த நாட்டின் நெய்ரி நகரில் ஹில்சைட் எண்டர்சா என்ற பாடசாலை உள்ளது. இந்தப் பாடசாலை கூடத்தில் நூற்றுக்கணக்கான மாணவ - மாணவிகள் கல்வி கற்று வருகின்றனர்.

இந்தப் பாடசாலையில் தங்கிப்படிக்கும் வகையில் மாணவர் விடுதியுள்ளது. இதில் பல மாணவர்கள் தங்கி கல்வி கற்று வருகின்றனர்.

இந்த நிலையில், பாடசாலையில் உள்ள மாணவர்கள் தங்கும் விடுதியில் நேற்று முன்தினம் இரவு பயங்கரத் தீ விபத்து ஏற்பட்டது. இந்தக் கோர விபத்தில் சிக்கிய 17 மாணவர்கள் தீயில் உடல் கருகிப் பலியாகினர். மேலும், 13 மாணவர்கள் பலத்த தீக்காயமடைந்தனர்.

தகவலறிந்து விரைந்து வந்த பொலிஸார், தீயணைப்புத்துறையினர் பாடசாலை விடுதியில் பற்றி எரிந்த தீயை அணைத்து காயமடைந்த மாணவர்களை மீட்டனர். மேலும், தீ விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (எ)



# முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா அமைதியாக இருக்க வேண்டும்!

## பங்களாதேஷ் தலைமை ஆலோசகர்

டாக்கா, செப். 07

பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவை நாடு கடத்துமாறு கோரும் வரை அவர் இந்தியாவில் அமைதியாக இருக்க வேண்டும் என்று அந்த நாட்டின் தலைமை ஆலோசகர் முகமது யூனுஸ் தெரிவித்தார்.

ஷேக் ஹசீனா இந்தியாவில் இருந்து கொண்டு அரசியல் கருத்துகளை வெளியிடுவது, இரு நாடுகளுக்கு இடையே உள்ள நட்புறவை பாதிக்கும். ஷேக் ஹசீனாவை, பங்களாதேஷுக்கு நாடு கடத்தக் கோரும் வரை, அவரை தங்கள் நாட்டில் வைத்துக்கொள்ள இந்தியா விரும்பினால், இரு நாடுகளுக்கும் இடையே முரண்பாடு ஏற்படாது. எனவே, ஷேக் ஹசீனா அமைதியாக இருக்க வேண்டும்.

எல்லோரும் இதை புரிந்துகொண்டிருக்கிறார்கள். ஷேக் ஹசீனா அமைதியாக இருக்க வேண்டும் என்று நாங்கள் உறுதியாகச் சொன்னோம். அவர் அமைதியாக இல்லாவிட்டால் அது இரு நாடுகளுக்கு இடையே உள்ள நட்புறவை பாதிக்கும். இந்தியா அவருக்கு அடைக்கலம் கொடுத்திருக்கிறது. அங்கிருந்து கொண்டு அவர் பிரசாரம் செய்து வருகிறார். அவர் சாதாரணமாக இந்தியா செல்லவில்லை. மக்களின் எழுச்சி மற்றும் கோபத்தைத் தொடர்ந்து அவர் தப்பியோடிவிட்டார்.

ஷேக் ஹசீனா மீண்டும் பங்களாதேஷ் அழைத்து வரப்பட வேண்டும் என்று கூறுகிறீர்களா? என்ற கேள்விக்கு பதிலளித்த யூனுஸ், "ஆம், அவர் திரும்பக் கொண்டுவரப்பட வேண்டும், இல்லையெனில் பங்களாதேஷ் மக்கள் அமைதியாக இருக்க மாட்டார்கள். ஷேக் ஹசீனா செய்த அட்டூழியங்கள், இங்குள்ள அனைவர் முன்னிலையிலும் விசாரிக்கப்பட வேண்டும்- என்றார். (எ)

# ரஷ்யா - உக்ரைன் அமைதிப் பேச்சில் இந்தியா, சீனா, பிரேசில் மத்தியஸ்தம்

## ரஷ்ய ஜனாதிபதி புடின் விருப்பம்

மொஸ்கோ, செப். 07

ரஷ்யா - உக்ரைன் அமைதிப் பேச்சுக்களில் இந்தியா, சீனா, பிரேசில் ஆகிய நாடுகள் மத்தியஸ்தர்களாக செயல்பட முடியும் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்தார்.

ரஷ்யாவின் விளாடிவோஸ்டோக் நகரில் உள்ள கிழக்கு பொருளாதார மன்றத்தில் நடந்த கேள்வி பதில் நிகழ்வில் பங்கேற்ற புடின், "ரஷ்யா, உக்ரைனுடன் பேச்சுகளை நடத்தத் தயாரா என்று கேட்டால், அமைதிப் பேச்சுகளுக்கு நாங்கள் ஒருபோதும் மறுத்ததில்லை. ஆனால், சில இடைக்கால கோரிக்கைகளின் அடிப்படையில் அல்ல, துருக்கியின் இஸ்தான்புல் நகரில் நடைபெற்ற பேச்சுகளின் போது ஒப்புக் கொள்ளப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் பேச்சுகள் நடத்தப்பட வேண்டும்.




நாங்கள் ஓர் உடன்பாட்டை எட்ட முடிந்தது. அதுதான் மையப் புள்ளி. இந்த ஆவணத்தை துவக்கிய உக்ரைனிய தூதுக்குழுவின் தலைவரின் கையொப்பம் இதற்கு சாட்சியமளிக்கிறது. அதாவது, எட்டப்பட்ட ஒப்பந்தங்களில் உக்ரைனிய தரப்பு திருப்தியடைந்துள்ளது. ஆனால், அமெரிக்கா, சில ஐரோப்பிய நாடுகளின் உயர் தலைவர்களின் குறுக்கீடு காரணமாகவே அந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வரவில்லை. ரஷ்யா தோல்வியடைய வேண்டும் என்று அவர்கள் விரும்பியதால், ஒப்பந்தத்தை ஏற்க வேண்டாம் என்று அவர்களுக்கு உத்தரவு வழங்கப்பட்டது. இதன் காரணமாகவே அது நடைமுறைக்கு வரவில்லை" என்று புடின் கூறினார்.

ரஷ்யா - உக்ரைன் அமைதிப் பேச்சுக்களில் இந்தியா, சீனா, பிரேசில் ஆகிய நாடுகள் மத்தியஸ்தர்களாக செயல்பட முடியும் என்றும் புடின் தெரிவித்தார். புடினின் இந்தக் கருத்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் மொஸ்கோ மற்றும் கீவ் பயணத்தைத் தொடர்ந்து வெளியாகியுள்ளது. (எ)

# இந்தியா - சிங்கப்பூர் இடையே 4 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

சிங்கப்பூர், செப். 07

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, சிங்கப்பூர் பிரதமர் லோரன்ஸ் வோங் முன்னிலையில் இந்தியா - சிங்கப்பூர் இடையே டிஜிற்றல் தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இரண்டு நாள் பயணமாக சிங்கப்பூர் சென்ற மோடி, அந்த நாட்டு பிரதமர் லோரன்ஸ் வோங் உடன் பேச்சுகளை நடத்தினார். இரு பிரதமர்கள் இடையேயான பேச்சுகளைத் தொடர்ந்து இரு நாடுகளின் தூதுக்குழுக்களுடன் இணைந்த பேச்சுகள் நடைபெற்றன. இதையடுத்து, இரு நாடுகளுக்கு இடையே நான்கு முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

டிஜிற்றல் தொழில்நுட்பங்கள், செமிகண்டக்டர் (குறைக்கடத்தி) துறை, சுகாதாரம் மற்றும் மருத்துவம், கல்வி மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றில் ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கில் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷ சகாக்களை களையெடுக்கும் ரணில்

## அரசிலிருந்து வெளியேற்ற அதிரடி முடிவு

கொழும்பு, செப். 07

**ஜனாதிபதித் தேர்லில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்காது மகிந்த ராஜபக்ஷவுக்கு நெருக்கமாக இருப்பவர்களுக்கு விலகிச் செல்லுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.**



அரசாங்கத்தில் பெயருக்கு இருந்து கொண்டு, தேர்தல் பணிகளை குழப்பிவந்த நான்கு அமைச்சர், பிரதியமைச்சர்களை பதவி விலகுமாறு ரணில் விக்ரமசிங்கவிற்கு தொடர்ச்சியாக அழுத்தம் கொடுக்கப்பட்டு வந்தது.

இதனையடுத்து, தனக்கு ஆதரவு வழங்காது உள்ளே இருந்து செயல்படுவோரை உடனடியாக வெளியேறுமாறு ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்காமல் மக்களுக்கான பணிகளில் சிலர் முட்டுக்கட்டையாக இருந்த நிலையில் பிரதி, இராஜாங்க அமைச்சர்கள் நால்வரை ஜனாதிபதி நேற்று முன் தினம் பதவி நீக்கியிருந்தார்.

இந்த நிலையில், பதவி நீக்கப்பட்ட நால்வரும் உள்ளிட்ட பலர் இணைந்து மொட்டுக் கட்சி அலுவலகத்தில் ஊடகச் சந்திப்பொன்றை நடத்த தயாராகி வருவதாக அந்தக் கட்சித் தரப்பு தகல்வகள் தெரிவிக்கின்றன. (அ)

# சிறைக் கைதிகளுக்கும் வாக்களிப்பதற்கு உரிமை

## சாத்தியப்பாடு குறித்து ஆராய்வு

கொழும்பு, செப். 07

எதிர்வரும் 21 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் சிறைக்கைதிகள், வாக்களிக்கும் உரிமை தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, தேர்தல்கள் ஆணைக்குழு, சிறைச்சாலைகள் திணைக்களம் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளின் அதிகாரிகள் ஒன்றிணைந்து, இந்த விடயத்தில் எதிர்கொள்ளப்படவுள்ள சவால்கள் குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சட்ட ரீதியாக தகுதியுள்ள கைதிகள் பங்குபற்றுவதில் உள்ள நடைமுறை தடைகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், பாதுகாப்பு விடயங்கள் மற்றும் சிறை வசதிகளுக்குள் வாக்களிக்கும் செயல்முறையின் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்தல் ஆகியவை ஆராயப்பட்டுள்ளன.

இந்த தடைகள் இருந்தபோதிலும், கூட்டத்தில் கலந்துகொண்ட அனைத்து தரப்பினரும் கைதிகளின் வாக்களிக்கும் உரிமையின் முக்கியத்துவத்தை அங்கீகரித்துள்ளனர்.

மேலும், அடையாளம் காணப்பட்ட நடைமுறைச் சிக்கல்களுக்கு சாத்தியமான தீர்வுகளை எடுப்பதற்கு ஏகமனதாக ஒப்புக்கொண்டதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# நாமலுக்கு எதிரான வழக்கு பெப்வரியில் விசாரணைக்கு!

கொழும்பு, செப். 07

பாராளுமன்ற உறுப்பினரும் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளருமான நாமல் ராஜபக்ஷ உள்ளிட்டோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள முறைப்பாடு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இதற்கமைய, குறித்த வழக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என கொழும்பு நீதிவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

1.5 கோடி ரூபாய் இந்த முறைப்பாடு கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே முன்னிலையில் நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்ட போதே இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் போது நாமல் ராஜபக்ஷ சட்டவிரோதமாக சம்பாதித்த 1.5 கோடி ரூபாய் முதலீடு செய்தமை தொடர்பில் முறைப்பாடு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது.

இந்நிலையில், குறித்த முறைப்பாட்டுக்கான விசாரணைகள் தொடர்பான அனைத்து ஆலோசனைகளும் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்ட குற்றப் புலனாய்வு திணைக்களம் நீதிமன்றில் தெரிவித்துள்ளது. (அ)

# எல்பிட்டி பிரதேச சபைத் தேர்தல் பெரமுனவின் சார்பில் கட்டுப்பணம்

கொழும்பு, செப். 07

காலி - எல்பிட்டி பிரதேச சபைத் தேர்தலுக்காக பொதுஜன பெரமுன சார்பில் அதன் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் உள்ளிட்ட தரப்பினர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

நேற்று முற்பகல், காலி மாவட்ட செயலகத்தில் அவர்கள் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளனர்.

எல்பிட்டி பிரதேச சபை தேர்தலுக்காக கடந்த மாதம் 26ஆம் திகதி முதல் கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கை ஆரம்பமானது.

இதற்கான கால அவகாசம் எதிர்வரும் 11ஆம் திகதி வரை வழங்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 9ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# ஊவா மாகாண ஆளுநர் முஸம்மில் இராஜினாமா

கொழும்பு, செப். 07

ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில், தனது பதவியை இராஜினாமா செய்துள்ளதுடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு, கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில், பதவியை இராஜினாமா செய்வதாக, கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இந்த நிலையில், ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளதாக, ஏ.ஜே.எம் முஸம்மில், அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (அ)

# சமூக ஊடகங்களில் பொய்ப்பிரசாரங்கள்

கொழும்பு, செப். 07

சமூக ஊடகங்களில், ஜனாதிபதி தேர்தல் தொடர்பான பொய்ப்பிரசாரங்கள் அதிகரித்துள்ளதாக, கபே அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

சுதந்திரமானதும் நீதியானதுமான மக்கள் அமைப்பான கபே அமைப்பின் கண்காணிப்புகளின்படி, 2024 ஜனாதிபதி தேர்தல் காலப்பகுதியில் சமூக ஊடகங்களில் பொய்ப்பிரசாரங்கள் மற்றும் வெறுப்பூட்டக்கூடிய பிரசாரங்கள் அதிகரித்துள்ளதாக கபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் மனாஸ் மக்கின் தெரிவித்துள்ளார்.

2019 ஜனாதிபதி தேர்தலுடன் ஒப்பிடுகையில் இது குறிப்பிடத்தக்க அதிகரிப்பை காட்டுவதாக அவர் குறிப்பிட்டார்.

ஊடகங்களுக்கு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

5 வேட்பாளர்களை இலக்கு வைத்து வெறுப்பூட்டகூடிய பிரசாரங்கள், பொய்யான செய்திகள் மற்றும் தவறான தகவல்கள் பகிரப்படுவது தெரியவந்துள்ளதாகவும், இது சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கு தடையாக இருப்பதாகவும் மனாஸ் மக்கின் தெரிவித்துள்ளார். (அ)

# ஐம்பது வீத மானிய அடிப்படையில் விதை உருளைக்கிழங்கு வேண்டும்

## யாழ். மாவட்ட கமக்கார அமைப்புக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 07

ஐம்பது சதவீத மானிய அடிப்படையில் விதை உருளைக் கிழங்கை அரசாங்கம் வழங்க வேண்டும் என யாழ். மாவட்ட கமக்கார அமைப்புக்களின் அதிகாரசபை தலைவர் க.தியாகலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐம்பது சதவீத மானிய அடிப்படையில் விதை உருளைக்கிழங்கை அரசாங்கம் வழங்க வேண்டும் எனவும் விவசாயப் பயிர்ச் செய்கைக்காகப் பெறப்பட்ட கடன்களைத் தள்ளுபடி செய்வதாக வெளியான அறிவிப்பு தொடர்பில் தாம் மகிழ்வடைவதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# யுக்தியவில் 736 பேர் கைது

கொழும்பு, செப். 07

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலத்துக்குள் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின்போது போதைப்பொருள் குற்றம் தொடர்பில் 736 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 719 ஆண்களும் 17 பெண்களும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 10 பேர் பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் போதைப்பொருட்களுக்கு அடிமையாகியுள்ள 05 பேரை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து 185 கிராம் 573 மில்லி கிராம் ஹெரோயின், 337 கிராம் 835 மில்லி கிராம் ஐஸ், 273 போதை மாத்திரைகள் மற்றும் 1,716 கிராம் 947 மில்லி கிராம் கஞ்சா ஆகிய போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர். (அ)

# ஐஸ் போதைப்பொருளுடன் பொலிஸ் கான்ஸ்டபிள் கைது

கொழும்பு, செப். 07

ஐஸ் போதைப்பொருளுடன் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கல்நெவ பொலிஸார் தெரிவித்தனர்.

கல்நெவ பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இபலோகம பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 42 வயதுடைய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிள் போதைப்பொருட்களுக்கு அடிமையானவர் என பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் கல்நெவ மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் இருந்து வட்ஸ்அப் ஊடாக போதைப்பொருட்களை கொள்வனவு செய்வதாக பொலிஸ் விசாரணைகளில் மேலும் தெரியவந்துள்ளது. (அ)

# போலி நாணயத்தாள்கள் வைத்திருந்த பெண் கைது!

கொழும்பு, செப். 07

62 போலி 5000 ரூபா நாணயத்தாள்களை வைத்திருந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 44 வயதுடைய ஹேனேகம, அக்குரஸ்ஸ பிரதேசத்தை சேர்ந்தவராவார்.

நேற்று முன் தினம் இரவு தெமட்டகொடை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வேலுவன வீதி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பொலிஸாரின் விசேட தேடுதல் நடவடிக்கையின் போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

பிற்பகல் 3 மணி தொடக்கம் 5 மணி வரை நடைபெறவுள்ளது. இந்த நிகழ்ச்சி அனைத்து முக்கிய தொலைக்காட்சி அலைவரிசைகள் மற்றும் சமூக ஊடகங்கள் மூலமாக நேரலையாக ஒளிபரப்பாகவுள்ளது.

இந்த நேரலை விவாதத்தில் சுயேச்சையாக போட்டியிடும் தமிழ்ப் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரன், ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித் பிரேமதாஸ, சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாமல் ராஜபக்ஷ, "சர்வஜன அதிகார" கூட்டணியின் திலித் ஜயவீர ஆகியோர் பங்கேற்பதாக உறுதியளித்துள்ளனர்.

இதேவேளை, "தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸநாயக்க உட்பட ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்களும் விவாதத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். ஆனால், அவர்கள் வருகையை உறுதிப்படுத்தவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்பது கடினம் என அவரின் தரப்பினர் எழுத்து மூலம் அறிவித்துள்ளனர்" என்று பவ்ரல் அமைப்பின் தலைவர் தெரிவித்தார். (ஐ)

## போர்க்...

இல்லையா?", என்று கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த அவர், "இறுதிப் போரின் போது என்ன நடந்தது என்பதை கண்டறிவதும் - வெளிப்படுத்துவதும்தான் என் வேலை. தண்டனை வழங்குவது நீதிமன்ற சுயாதீனத்துடன் தொடர்புடைய விடயம். நான் போர்க் குற்றவாளிகளை கண்டறிவேன். நீதிமன்றங்கள் அவர்களைத் தண்டிக்கும்" - என்றார்.

முன்னதாக அநுரகுமார வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு அளித்த நேர்காணலில், போரின்போது என்ன நடந்தது என்பதைக் கண்டறிய வேண்டும் என்பதே தமிழ் மக்களின் கோரிக்கையாக உள்ளது. அவர்கள் எவரையும் தண்டிக்கவேண்டும் என்று கோரவில்லை. எனவே, போரில் என்ன நடந்தது என்று வெளிப்படுத்தப்படும்." என்று கூறியிருந்தமை நினைவு கொள்ளத்தக்கது. (ஐ)

## தமிழினப்...

இலங்கை - கனடா செயல்பாட்டு கூட்டமைப்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தது.

கனடா அரசாங்கம் தனது அதிகாரத்துக்கு அப்பால்பட்ட விதத்தில் செயல்படு கின்றது. கருத்து சுதந்திரம் சமத்துவ உரிமைகளை மீறுவதாகத் தெரிவித்திருந்த இலங்கை அமைப்பு, தமிழ் இனப்படுகொலை குறித்த மாற்றுக்கருத் துகளை முடக்குவதற்கு இந்த சட்டம் பயன்படுத்தப்படும் என்று தெரிவித்திருந் தது.

எனினும், அந்த அமைப்பின் வேண்டுகோளை நிராகரித்துள்ள ஒன்ராறியோ மேல்முறையீட்டு நீதிமன்றம், "இனப்படுகொலை கல்வி வாரச்சட்டம் கனடாவின் அரசமைப்புக்கு உட்பட்டது. அது பாரபட்சமான தாக்கங்களை ஏற்படுத்தாது. இந்த சட்டம் சிங்கள - பௌத்தர்களுக்கு எதிரான வெளிப்படையான இன வேறுபாட்டை கொண்டுள்ளது என ஹேவகே கூறியிருப்பதை நாங்கள் நிராகரிக்கின்றோம்", என்று கனடாவின் மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்த சட்டத்தின் முன்னுரையில் இலங்கை அரசாங்கத்தின் இனப்படுகொலை கொள்கைகள் என குற்றம்சாட்டப்படும் கொள்கைகள் சிங்கள - பௌத்த மையப்படுத்தப்பட்டவை என்றே குறிப்பி டப்படுவதாகவும் சிங்கள - பௌத்தர்கள் ஓர் இனக்குழுவாக அதற்கு பொறுப்பாளிகள் தெரிவிக்கவில்லை எனவும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (ஐ)

## கிளிநொச்சியில்...

காயத்திரி, கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஸ்மத் ஜமில், சிறுவர் நீதிமன்ற நீதிபதி முரளிதரன் நிஞ்சினி ஆகியோர் பங்கேற் றனர்.

அத்துடன், சட்டத்தரணிகள், நீதிமன்ற உத்தியோகத்தர்கள், மாவட்ட சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

## தமிழ் அரசின்...

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இலங்கை தமிழ் அரசு கட்சியின் யாப்பில் மத்திய செயல்குழு கூட்டத்துக்கு எத்தனை நாள் அறிவித்தல் வழங்கப்படுவது என்பது தொடர்பான ஏற்பாடு இல்லை. ஆகவே, எவ்வளவு நாளில் வேண்டுமென்றாலும் மத்திய செயல்குழு கூடுவதற்கு உரித் துண்டு. ஆனால், பொதுவாகவே, நான்கு நாட்களுக்கு மேற்பட்ட அறிவித் தலை வழங்கி வந்திருக்கிறோம். ஜனாதி பதித் தேர்தல் தொடர்பில் ஏற்கனவே, நான்கு கூட்டங்களில் இந்த விடயம் தொடர்பாக பேசப்பட்டுள்ளது.

ஆகவே, கடந்த முதலாம் திகதி நடைபெற்ற கூட்டம் முன்னைய நான்கு கூட்டங்களின் தொடர்ச்சியான கூட்டம். ஆகவே, இது ஒத்திவைக்கப் பட்ட கூட்டம். அதாவது, முக்கியமாக ஜனாதிபதி வேட்பாளரின் விஞ்ஞாபனங்களை பரிசீலித்து அறிவிக்க வேண்டும் என்று 18ஆம் திகதி கூடிய மத்திய செயல்குழுவில் முடிவு எடுக்கப்பட்டது. அதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டது. இதில் நான், மாவை சேனாதிராசா, பொதுச்செயலாளர் சத்தியலிங்கம், சுமந்திரன், சிறீதரன் ஆகியோர் இருந்தோம்.

இதனை தொடர்ந்து மாவை சேனாதிராசா தாமாகவே சுமந்திரனிடம் அவ்வாறான ஓர் அறிக்கையை தயாரிக்குமாறு கேட்டிருந்தார். அந்த அறிக்கை தான் கடைசியாக நடந்த கூட்டத்தில் சுமந்திரனால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. ஆகவே, இந்தக் கூட்டங்கள் இரண்டு விடயங்கள் தொடர்பில் நடந்தன. ஒன்று பொது வேட்பாளர் மற்றது ஜனாதிபதி தேர்தல்.

எமது மத்திய குழுவில் 41 உறுப்பினர்கள். அதில், சம்பந்தனும் செல்வ ராஜாவும் காலமாகிவிட்டனர். எனவே, 39 பேரில் 26 பேர் கடந்த முதலாம் திகதி நடந்த கூட்டத்தில் பங்கேற்றார் கள். 11 பேர் இருந்தாலே கோரம். 26 பேர் உள்ளனர். இவர்களில் 18 பேர் பொது வேட்பாளரை ஆதரிக்கவில்லை என்று தெரிவித்தனர். நால்வரே பொது வேட்பாளரை ஆதரித்தனர். எனவே அவருக்கு ஆதரவு தெரிவிப்பதில்லை என்று முடிவானது. இதனால், அரிய நேத்திரனை போட்டியிலிருந்து விலகுமாறு கோரப்பட்டது.

அடுத்து, சுமந்திரன் தலைவர் மாவை சேனாதிராசாவால் கோரப்பட்ட அறிக்கையை தயாரித்து வட்ஸ் அப் குழுவில் பகிர்ந்த பின்னர் அறிக்கையை முன்வைத்தார். அதில், அநுரகுமார ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸவின் விஞ்ஞாபனங்களில் இருக்கும் முக்கிய விடயங்களை சுட்டிக்காட்டி இறுதியில் சஜித்தை ஆதரிப்பதாகக் கூறியிருந்தார்.

இந்தக் கருத்துக்கு அநேகமானவர்கள் சம்மதம் தெரிவித்தனர். இதேநேரம், நான் இந்த முடிவை மக்களுக்கு விடலாம் என்ற கருத்தை சொல்லியிருந்தேன். ஆனால், அதனை ஆதரித்தது இரண்டு பேர்தான். அத்தோடு அந்த கருத்து எடுபடவில்லை. சஜித் பிரேமதாஸவின் முன்மொழிவை ஏனைய இரண்டு பேரில் எவருமே எதிர்க்கவில்லை.

மேலும், கட்சி என்ற ரீதியிலே நாங்கள் ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளரான சஜித் பிரேமதாஸவை ஆதரித்து, பிரசாரத்தில் ஈடுபடுவதை தவிர்க்கலாம் என்ற கருத்தை நான் முன்வைத்தேன். அந்த கருத்துக்கும் அவர்கள் மறுப்பு தெரிவித்தனர் - என்றார். (ஐ)

# சுங்கத் திணைக்களத்துக்கு ரூ.100,000 கோடி வருமானம்!

கொழும்பு, செப். 07

வரலாற்றில் முதல் தடவையாக இந்த வருடத்தின் இதுவரையான காலத்தில் ஒரு இலட்சம் கோடி ரூபாய் சுங்க வருமானம் கிடைத்துள்ளதாக சுங்க பணிப்பாளர் நாயகம் சரத் நோனிஸ் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் சர்வதேச நாணய நிதியத்தால் 2024 ஆம் ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட 1.5 இலட்சம் கோடி ரூபாய் வருவாய் இலக்கை அடைந்து கொள்ள முடியும் என்றும் சுங்கப் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

8 மாதங்களில் ஒரு இலட்சம் கோடி ரூபாய் சுங்க வருமானம் கிடைக்கப் பெற்றமை இலங்கை சுங்கத் திணைக்கள வரலாற்றில் முதல் தடவை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# தேர்தல் விதிமுறைகள் மீறல் ஒருநாளில் 233 முறைப்பாடுகள்!

கொழும்பு, செப். 07

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நேற்று முன்தினம் நள்ளிரவு வரையான 24 மணித்தியாலங்களில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு 233 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையத்திற்கு 84 முறைப்பாடுகளும் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங்களுக்கு 149 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதன்படி, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2,460 ஆக அதிகரித்துள்ளது.

தேர்தல் விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 2,387 முறைப்பாடுகளும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 11 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த ஜூலை மாதம் 31ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியிலேயே இந்த முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஐ)

# ரயிலுடன் மோதி ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், செப். 07

யாழ்ராணி ரயிலுடன் மோதுண்டு ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கிளிநொச்சி - கணேசபுரம் புகையிரத கடவையைக் கடக்க முற்பட்டபோதே இந்த விபத்து இடம்பெற்றது. இதில், கிளிநொச்சி உமையாள்புரத்தை சேர்ந்த சுப்பையா சாந்தகுமார் (வயது - 58) என்பரே படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்தவர் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்த விபத்துக் குறித்து கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கங்கையில் மூழ்கி மாணவன் பலி!

கொழும்பு, செப். 07

ஜின் கங்கையில் நீராடச் சென்றபோது காணாமல் போன மாணவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டதாக நெலுவ பொலிஸார் தெரிவித்தனர்.

நெலுவ கடஹிங்கல பகுதியை சேர்ந்த ஜனிது சுரேந்திரா என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த மாணவர் நேற்றுமுன்தினம் மதியம் தனது நண்பர்களுடன் கங்கையில் குளித்தபோது காணாமல் போயிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வரிசை...

குருநாகல் - குளியாப்பிட்டியில் நடந்த பிரசா ரக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

2019ஆம் ஆண்டு பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். அரசியல் சூழ்ச்சியால் எமது அரசாங்கம் வீழ்த்தப்பட்டது. பங்களாதேஷ் நாட்டின் நிலைமைதான் 2022ஆம் ஆண்டு இலங்கையிலும் நிலவியது.

அதிகாரத்தைத் தக்கவைப்பதற்காக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கொல்வதற்கு ஆணை பிறப்பிக்கவில்லை. எவருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் பதவி விலகினார்.

தேசியத்தையும், நாட்டையும் பாதுகாப்பதற்காக அறகலயவுக்குள் இருந்தவரை இடைக்கால ஜனாதிபதியாக தெரிவு செய்தோம். பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெறுவதற்கு எடுத்த சிறந்த தீர்மானங்களுக்கு நிபந்தனையற்ற வகையில் ஒத்துழைப்பு வழங்கினோம்.

எமது ஒத்துழைப்புடன் நாட்டுக்கு எதிரான செயல்பாடுகளை முன்னெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது நாங்கள் அதற்கு இடமளிக்கவில்லை. தேசியத்துக்காகவே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தீர்மானித்தேன். எதற்காகவும் நாட்டுக்கு எதிராக செயல்படப் போவதில்லை - என்றார். (ஐ)

## ரணில்

அல்லது அநுரகுமார திஸநாயக்க வெற்றி பெற்றால், இந்த நிலை ஏற்படும். அத்துடன், பொருளாதாரத்தை கையாள்வது குறித்து அவர்களுக்கு சரியான புரிதல் இல்லாததே இதற்குக் காரணம் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## நாட்டின்...

பொதுக் கட்டமைப்பு எடுத்த முடிவானது ஆரோக்கியமான முடிவென எம்மை சந்திக்கின்ற மக்கள் தெரிவிக்கின்றனர். அவர்கள் சங்கு சின்னத்துக்கு வாக்களிக்கத் தயாராகவுள்ளனர்.

இதற்கு முன்னர் பொத்துவில்- பொலிகண்டி போராட்டம் உள்ளிட்ட பல போராட்டங்களை நடத்தியுள்ளோம். அவ்வாறே இதுவும் புள்ளடி இடுகின்ற போராட்டமாகும் - என்றார். (ஐ)

## வட்டுக்கோட்டை...

போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், அவர் சிகிச்சை பலனின்றி நேற்று வெள்ளிக்கிழமை உயிரிழந்தார்.

இந்த விபத்துக் குறித்து வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# தேர்தல் கால வன்முறைகள் இம்முறை மிகவும் குறைவு!

## தேர்தல் வன்முறை கண்காணிப்பு நிலையம்

கொழும்பு, செப். 07

**கடந்த கால தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் இம்முறை வன்முறைச்சம்பவங்கள் குறைவு என தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி பேராசிரியர் அர்ஜுன பராக்கிரம தெரிவித்துள்ளார்.**

தேர்தல் பிரசாரங்களுக்காக அரச சொத்துக்களை பயன்படுத்துவது தொடர்பில் அதிக எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுவதாக அவர் மேலும் கூறினார்.

தேர்தல் வன்முறை கண்காணிப்பு மையத்தில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- நாட்டில் கடந்த கால தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் இம்முறை வன்முறைச் சம்பவங்கள் குறைவாகப் பதிவாகியுள்ளன.

ஆயினும் பிரசாரங்களுக்காக அரச சொத்துக்கள் பயன்படுத்தப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

நீதிமன்றத்தால் பதவி நீக்கம் செய்யப்பட்ட அமைச்சர்கள் இருவருக்கு அதே துறையில் ஆலோசகர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

தேர்தல் பிரசாரங்களுக்காக அவர்கள் அரச சொத்துக்களை பயன்படுத்துகின்றனர்.

தமக்கு ஆதரவளிக்கவில்லை என்பதற்காக இராஜாங்க அமைச்சர்கள் நால்வரை ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க பதவி நீக்கம் செய்துள்ளார். அது தண்டனைக்குரிய குற்றமாகும்.

தபால்மூல வாக்களிப்பு இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் மகிழ்ச்சியான செய்தியை அறிந்து கொண்டதாக ரணில் விக்கிரமசிங்க மக்களுக்கு நன்றி கூறுகிறார். அவ்வாறு செய்ய முடியாது. ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச எதிர்க்கட்சித் தலைவருக்கான அலுவலகத்தில் தேர்தல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்து வதாகவும் முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது. எமக்கு கிடைத்த அனைத்து முறைப்பாடுகளையும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு தெரியப்படுத்தியுள்ளோம் - என்றார். (அ)

## ஊவா மாகாண ஆளுநராக அநுர விதானகமகே நியமனம்!

கொழும்பு, செப். 07

ஏ.ஜே.எம் முஸம்மில் பதவி விலகியதை அடுத்து ஏற்பட்ட ஊவா மாகாண ஆளுநர் வெற்றிடத்திற்காக அநுர விதானகமகே நியமிக்கப்பட்டுள்ளார்.

ஊவா மாகாண ஆளுநர் பதவியிலிருந்து ஏ.ஜே.எம். முஸம்மில் நேற்று முன்தினம் விலகியிருந்தார். தமது பதவி விலகலின் பின்னர் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கவிருப்பதாகவும் அவர் அறிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே ஏற்பட்ட ஆளுநர் பதவி வெற்றிடத்துக்கு அநுர விதானகமகே நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இதற்கு முன்னர் ஊவா மாகாண அபிவிருத்தி விவகாரங்களுக்குப் பொறுப்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராக பணியாற்றியுள்ளார். (அ)

## மாணவர்களுக்கு வட்டியற்ற கடன்

கொழும்பு, செப். 07

வட்டியில்லா கல்விக்கடன் திட்டத்தின் கீழ் 7000 மாணவர்களுக்கு கடன் வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 9ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை கோருவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த ஆண்டு, அதிகபட்சமாக, பதினைந்து இலட்சம் ரூபாய் வரை, ஐந்து பிரிவுகளின் கீழ் கடன் பெறலாம் மற்றும் மாணவர்கள் பதினெட்டு உயர்கல்வி நிறுவனங்களில் பட்டப்படிப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த கடன் தொகையைப் பெறுவதற்கு இரண்டு உத்தரவாததாரர்கள் கட்டாயம் என்றும், தாய் அல்லது தந்தை முதல் உத்தரவாததாரராக கையொப்பமிட வேண்டும் மற்றும் கடன் தொகையை அங்கீகரிக்கும் வங்கியின் தேவைக்கேற்ப இரண்டாவது உத்தரவாததாரரை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடன் பெற்ற 292 மாணவர்கள் கடன் தொகையை செலுத்த தவறியமையால் இம்முறை உத்தரவாததாரர்களின் தேவை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. (அ)

# இலங்கை விமானப்படைக்கு அமெரிக்கா வழங்கிய விமானம் அடுத்த வாரம் வரும்!

கொழும்பு, செப். 07



இலங்கை விமானப்படைக்கு அமெரிக்காவினால் நன்கொடையாக வழங்கப்பட்ட பீச் கிராப்ட் கிங் எயார் 360 ஈ.ஆர். விமானமானது அடுத்த வாரம் இலங்கையை வந்தடையும் என அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களத்தின் நிகழ்ச்சித்திட்டத்தினால் நிதியளிக்கப்பட்ட 2019 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த நன்கொடை இலங்கை விமானப்படையுடன் காணப்படும் நீண்டகால ஒத்துழைப்பின் ஒரு பகுதியாகும்.

தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள், போதைப் பொருள் தடுப்பு மற்றும் கடத்தல் மற்றும் கள்ளக் கடத்தலை முறியடித்தல் ஆகிய விடயங்களில் இலங்கையின் திறன்களை அதிகரிக்கும் வகையில் இம்மேம்படுத்தப்பட்ட விமானம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த நன்கொடை அமெரிக்க இலங்கை பாதுகாப்பு ஒத்துழைப்பினை மேலும் வலுப்படுத்தும் அதேவேளை இந்நாட்டின் கடல்சார் கண்காணிப்பு நடவடிக்கைகளையும் கணிசமாக மேம்படுத்தும்.

இலங்கை விமானப்படைக்கு எவ்வித செலவுகளுமின்றி, அமெரிக்க அரசினால் வழங்கப்படும் 19 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியுடைய இம்மானி யமானது, விமானம் மற்றும் அதற்கு தேவையான உதவிச் சேவைகள் ஆகியவற்றை உள்ளடக்குகிறது.

இவ்விமானம் அது தொடர்பான அறிமுகம் மற்றும் அதை இயக்குவது தொடர்பான பயிற்சி என்பன நிறைவடைந்த பின்னர், இவ்வாண்டின் பிற்பகுதியில் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக, இலங்கை அதிகாரிகள் இவ்விமானத்தை இயக்குவதற்கும் பராமரிப்பதற்கும் முழுமையாக தயாராக இருப்பதை உறுதி செய்வதற்காக அமெரிக்க அதிகாரிகள் மூன்று மாதகால பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றை நடத்துவார்கள்.

அடுத்த வாரம் வருகை தருமென எதிர்பார்க்கப்படும் விமானத்தின் வருகைக்குத் தயாராவதற்காக 2024 ஜூன் முதல் ஒகஸ்ட் மாதம் வரை, கன்சாஸ் மற்றும் புளோரிடாவில் இடம்பெற்ற பயிற்சிகளில் இலங்கை விமானப் படை அதிகாரிகள் பங்கேற்றனர். (அ)

## மன்னாரில் கவனிப்பாரற்ற நிலையில் தனிநாயகம் அடிகளார் நினைவு சிலை



மன்னார், செப். 07

மன்னார் நகர மத்தியில் அமைக்கப்பட்டிருக்கும் தமிழ் வளர்த்த பெருந் துறவியான தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நினைவுச் சிலை காகங்களின் எச்சத்தினால் அசுத்தமாகி கவனிப்பாரற்ற நிலையில் உள்ளதாக பொதுமக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

தமிழ் தூது தனிநாயகம் அடிகள் ஈழத்தமிழர்களின் தமிழ் வளர்ச்சி பாதுகாப்பில் பெரும் பங்காற்றி தமிழுக்காக உயிர் நீத்தவர் .

அவரது தியாகம் உலகறியும் வகையில் மன்னார் மாவட்டத்தில் சில வருடங்களுக்கு முன்பு தனிநாயகம் அடிகளாரின் நினைவு சிலை அமைக்கப்பட்டு அவரது நினைவேந்தல் தினங்களில் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டு வந்தது.

தற்போது குறித்த நினைவுச் சிலை கவனிப்பார் அற்ற நிலையில், காகங்களின் எச்சங்களால் அசுத்தப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளமை குறித்து மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (அ)

# சோலர் மின்னிணைப்பு அனுமதியில் மோசடி ஜனாதிபதி செயலகத்துக்கு முறைப்பாடுகள்

கொழும்பு, செப் 07

சுன்னாகத்தில் அமைந்துள்ள இலங்கை மின்சார சபையின் பிராந்திய பொறியியல் காரியாலயத்தில் இருந்து சோலர் மின்னிணைப்புக்கான அனுமதி வழங்கப்படுவதில் முறைகேடுகள் இடம்பெறுவதாகப் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் ஜனாதிபதி செயலகத்துக்குப் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீடுகள் மற்றும் கட்டடங்களின் கூரை மேல் பொருத்தப்படும் சோலர் படல் இணைப்புக்காக 42 கிலோ வாட்ஸ் வரையான இணைப்புக்களுக்கான அனுமதி சுன்னாகத்தில் உள்ள இலங்கை மின்சார சபையின் பிராந்திய பொறியியல் காரியாலயத்தினாலேயே வழங்கப்படுகின்றன. அவ் அனுமதிக்காக விண்ணப்பித்த பலரது விண்ணப்பங்கள் வருடக் கணக்காகத் தேங்கிப் போயுள்ளன. இந்நிலையில் குறுகிய காலத்தினுள் சிலருக்கு முறையற்ற விதத்தில் அனுமதிகள் வழங்கப்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளதுடன் அதனால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட பலர் ஜனாதிபதியின் குறைகேள் அதிகாரிக்கு முறைப்பாடு செய்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் உட்பட உயரதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும், நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாததை அடுத்தே ஜனாதிபதி செயலகத்துக்கு முறைப்பாடுகள் அனுப்பி வைக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

முறைப்பாடுகள் தொடர்பில், ஆராய்ந்து அறிக்கையிடுமாறு ஜனாதிபதியின் செயலாளரினால் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், யாழ்ப்பாணத்தில் சோலர் மின்னிணைப்புக்கான அனுமதி வழங்கல் தொடர்பில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வாடிக்கையாளர்கள் மூவர் கொழும்பிலுள்ள மின்சார சபையில் முன்வைத்த தகவல் கோரிக்கைகளுக்கு உரிய தகவல்கள் வழங்கப்படாத காரணத்தினால், தகவல் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு லிமிட்டெட் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.09.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org